பக்கங்கள்: பத்து

Registered as a NewsPaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்14 வள்ளுவர் ஆண்டு2030 வைகாசி 28வெள்ளிக்கிழமை (11-06-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்169

# இருமுனைகளில்படையினர்நேற்று பூநகரி நோக்கி முன்னேற முயற்சி!

## புலிகளுடன் பெரும் மோதல் மூண்டது

யாழ்ப்பாணம், ஜூன் 11

**பூநகரியை நோக்கி இரு முனைகளில் நேற்று முன்னேற முயன்ற படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் கடும்சண்டை நடைபெற்றுள்ளது.**

ஒரு முனையில் பரந்தன் பாதுகாப்பு அரண்களில் இருந்து பரந்தன் — பூநகரி வீதியால் கனரக வாகனங்கள் சகிதம் பூநகரியை நோக்கி படையினர் முன்னேற முயன்றனர்.

மறு முனையில் மண்டைதீவில் இருந்து படகுகள் மூலமும், ஹெலிகள் மூலமும் நல்லூரில் இறங்கி பூநகரியை நோக்கி முன்னேற முயன்றனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். வான் பரப்பில் விமானங்கள், ஹெலிகள்

### குண்டுகளால் நகர் அதிர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 11

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் நேற்றுக் காலை குடாநாட்டு வான் பரப்பில் நுழைந்த கிபிர் விமானங்கள் கல்முனை மன்னித்தலைப் பகுதியில் குண்டு வீசித் தாக்குதலை நடத்தின.

இதனால் யாழ். நகரப்பகுதி, தென்மராட்சிப் பகுதிகளில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 9 பேர் உயிரிழந்ததாக புலிகள் தரப்பு அறிவிப்பு

வவுனியா ஜூன் 11

பரந்தன்—செக்கதீவு இராணுவக் காவலரண் பகுதியில் இருந்து நேற்றுக்காலை முன்னேற முயன்ற படையினருடன் ஏற்பட்ட மோதல்களில் தமது தரப்பில் 9 பேர் உயிரிழந்தனர் என்று விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)



அப்ப உலக்கை தேய்ந்து உளிப்பிடியான கதை தான்...

## 6 உறுப்பினருடன் மாநகரசபைகூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ். மாநகர சபை மாதாந்தக் கூட்டம் நேற்று ஆறு உறுப்பினர்களுடன் மாநகரசபை பிரதிமேயர் ந.ரவிராஜ் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்துக்கு புளொட், ஈ.பி.டி.பி. மற்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## முருங்கனில் புலிகள் தாக்குதல்

முருங்கன் பொலிஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள காவலரண் மீது விடுதலைப் புலிகள் நேற்றுக் காலை 11.30 மணியளவில் மேற்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### மோதல்களுக்கு மத்தியில்

## குடாக்கடலூடாக 18 பேர் குருநகர் வந்து சேர்ந்தனர்

யாழ்ப்பாணம், ஜூன் 11

தாம் கட்டியிருந்த வேட்டிகளைக் கழற்றி மேலே காட்டியவண்ணம் 18 அகதிகள் வன்னியிலிருந்து யாழ் குடாக்கடல் ஊடாக நேற்று குருநகர் வந்து சேர்ந்தனர்.

வன்னியிலிருந்து ஒரு சில நாள்களுக்கு முன் வாடகை படகுகளில் புறப்பட்ட இந்த அகதிகள் குருநகர் கடலுக்கு சமீபமாக உள்ள கரையொன்றில் நேற்று முன்தினம் இரவு இறக்கி விடப்பட்டனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கொட்டும் மழையிலும் 75 வீத மக்கள் வாக்களிப்பு

### தேர்தல் முடிவு தாமதம்

கொழும்பு, ஜூன் 11

தென்மாகாண சபைக்கு நேற்று நடந்த தேர்தலில் கொட்டும் மழையிலும் 75 சத வீத மக்கள் வாக்களித்தனர்.

பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் இடம்பெற்ற இந்த தேர்தலில் நேற்று மட்டும் நூறுக்கு மேற்பட்ட வன்செயல் சம்பவங்கள் இடம்பெற்றன என்று கூறப்பட்டது.

காலையில் மந்த நிலையில் இருந்த வாக்களிப்பு நண்பகலுக்குப் பின்னர் சுறுசுறுப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அதிபர், ஆசிரியர்கள் சுகவீனப் போராட்டம்

### ஜூலை 2 இல் நடத்த முடிவு

திருகோணமலை, ஜூன் 11

வடக்கு — கிழக்கு மாகாணத்தில் பணிபுரியும் அதிபர்கள், ஆசிரியர்கள் அடுத்த மாதம் 2 ஆம் திகதி சுகவீன லீவுப் போராட்டம் ஒன்றை நடத்த உள்ளனர்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் செயற்குழு நேற்று முன்தினம் திருகோணமலை விக்னேஸ்வராக் கல்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகள் விமான சேவை விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 11

பலாலிக்கும் இரத்மலானைக்கும் இடையிலான விமானசேவை நாளைமுதல் விஸ்தரிக்கப்படவிருக்கின்றது

நாளைமுதல் திங்கள், வியாழன், சனிக்கிழமைகளில் மேலும் ஒரு சேவை இடம்

[10 ஆம் பக்கம் பார்க்க]

# வீரவிதான இயக்கத்துக்கு எதிரான தமிழர் பேரணிக்கு அனுமதி மறுப்பு!

கொழும்பு, ஜூன் 11

பேரினவாத அமைப்பான சிங்கள வீரவிதான இயக்கத்துக்கு எதிராகஇன்று கொழும்பில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணிக்குப் பொலீஸார் அனுமதி வழங்க மறுத்து விட்டனர்.

சட்டமும், சமாதானமும் சீர்குலைந்து போகும் என்று தெரிவித்தே பொலீஸார் இதற்கு அனுமதி வழங்க மறுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அனுமதி மறுப்புத் தொடர்பாக இ. தொ. கா. நாடாளுமன்ற உறுப்பினர் யோகராஜன் தலைமையிலான குழு ஒன்று நேற்றுப் பொலீஸ் மா அதிபருடன் பேச்சு நடத்தியது.

தென் மாகாண சபைத் தேர்தல் பணிக்குப் பொலீஸார் அனுப்பப்பட்டுள்ளதால் இன்று பேரணி நடத்த அனுமதிக்க முடியாது என்றும் — வேறு ஒரு தினத்தில் ஏற்பாடு செய்தால் அனுமதி வழங்க முடியும் என்றும் —

[10 ஆம் பக்கம் பார்க்க]

## வடக்கு - கிழக்கு தேர்தல் தற்போதைக்கு இல்லை

### ஆளுநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 11

வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலை இப்போதைக்கு நடத்தமுடியாது. அதற்கான சூழ்நிலை தற்சமயம் இல்லை.

மேற்கண்டவாறு வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தனா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு கடந்த திங்கட்கிழமை வந்து சேர்ந்த ஆளு

[10 ஆம் பக்கம் பார்க்க]

## பகிஷ்கரிப்பால் நேற்று செயலக பணிகள் பாதிப்பு

### துறைமுகம் ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ். செயலகத்தில் இயங்கிவரும் புனர்வாழ்வுப் பகுதியினர் திட்டமிட்டபடி நேற்று தமது அடையாளப் பகிஷ்கரிப்பை நடத்தினர்.

நேற்று முழுநாளும் நடத்திய இந்தப் பகிஷ்கரிப்பின் போது தமது நிலைப்பாடு குறித்த மகஜர் ஒன்றையும் வடக்கு—கிழக்கு மாகாண ஆளுநரிடம் அவர்கள் சமர்ப்பித்தனர்.

இந்தப் பகிஷ்கரிப்புக்கு ஆதரவாக செயலக ஏனைய

[10 ஆம் பக்கம் பார்க்க]

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அறிவித்தல்

பளை லயன்ஸ் கழகத்தினால்
11 - 6 - 1999 இல் அதிர்ஷ்டம் பார்க்கப்படவிருந்த சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற் போடப்பட்டுள்ளது.

திகதி பின்பு அறிவிக்கப்படும்

செயலாளர்,
லயன்ஸ் கழகம், பளை.

09-06-99 (சி/7857)

---

# 30-ம் நாள் நினைவஞ்சலி

புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும் தலவாக்கலையை வசிப்பிடமாகவும் கொண்ட

## திருமதி இராசம்மா இரத்தினசிங்கம்

அவர்கள் 13 - 05 - 99 இல் காலமானார்.
அன்னாரின் 30 ஆம் நாளாகிய இன்று (11-6-99) வெள்ளிக்கிழமை அவரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
இராசையா, இரத்தினம்மா.
செல்லத்துரை, சின்னத்தம்பி,
இராசதுரை, (சகோதரர்கள்)

தகவல்
சிவஸ்ரீ ரவீந்திரராஜா,
ஸ்ரீஞானப்பழனி ஆண்டவர் ஆலயகுரு,
கோண்டாவில் கிழக்கு.

[66522]

---

# புலமைப்பரிசில் 1999

41 ஆவது பரீட்சையில் அதிகூடிய புள்ளி பெற்றோர்

ம. பிரதீபன்
யா. இ. ஆ. பா.
சு. லிஜா
யா/ சுண்டுக்குளி ம. க.
வி. மயூரன்
யா. இ. ஆ. பா.
இ. சர்மியா
யா/ இ. மகளிர் ஆ. பா.
க. நிரோஷி
சோ. நிருபா
யா/ உடுவில் ம. க.
ஸ்ரீ. யாதவன்
யா/ கந்தரோடை
தமிழ் கந்தையா வித்.

அடுத்த பரீட்சை:
13 - 06 - 99

**BOND**
யாழ்நகர்.

(66531)

---

# புலமைப் பரிசில் பயிற்சிப் பரீட்சை - 99

சுந்தர் வெளியீடு - 10

| | |
|---|---|
| நாவலர் கல்வி நிலையம் | ஆனைப்பந்தி. |
| கலைவாணி கல்வி நிலையம் | கோப்பாய் |
| வள்ளுவர் அக்கடமி | உரும்பராய். |
| ஐடியல் கல்வி நிறுவனம் | நீர்வேலி. |
| லக்கி கல்வி நிறுவனம் | அச்சுவேலி. |

13 - 06 - 99 ஞாயிறு

♥ வெளி மாணவரும் தோற்றலாம்.
♥ வினாத்தாள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு;
மேற்படி நிறுவனங்கள், புத்தகசாலைகள்.
54/9, கொழும்புத்துறை வீதி, பாண்டியன்தாழ்வு.

(66538)

---

# அறிவித்தல்

1. நயினாதீவு நாகபூசனி அம்மன் கோவில் வருடாந்த மஹோற்சவ காலத்தில் ஆலய சூழலில் வியாபாரம் செய்வோர் வேலணைப் பிரதேச சபை உபபணிமனை நயினாதீவுடன் தொடர்பு கொண்டு வியாபார அனுமதி உத்தரவுப் பத்திரத்தினை பெற்றுக் கொண்ட பின்பே வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படுவர்.
2. படகுச் சேவையில் ஈடுபடும் படகு உரிமையாளர்களும் வியாபார அனுமதி உத்தரவுப் பத்திரத்தினை நயினாதீவு உபபணிமனையில் பெற்று படகுச் சேவையினை நடாத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ந. கருணாகரகுருமூர்த்தி ஜே. பி. யூ. எம்.
தலைவர்
வேலணை பிரதேசசபை

வேலணைப் பிரதேசசபை.
09—06—1999 (சி/7852)

---

# இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

## கோப்பாய்ப் பிரிவு

நடத்தும்

## கையெழுத்துச் சஞ்சிகைக் கண்காட்சி

இலங்கை செஞ்சிலுவைச் சங்க கோப்பாய்ப் பிரிவு நடத்திய பத்திரிகையாளர் பயிற்சி நெறியிற் கலந்துகொண்ட பயிற்சியாளர்கள் தயாரித்தவையும், யாழ்ப்பாணக் கல்வி வலயப் பாடசாலை மாணவர்கள் தயாரித்தவையுமான கையெழுத்துச் சஞ்சிகைகளின் மாபெரும் கண்காட்சி ஒன்றினை நடத்த இலங்கை செஞ்சிலுவைச் சங்க கோப்பாய்ப்பிரிவு முன்வந்துள்ளது.

**காலம்:** 12, 13—06—1999 காலை 10.00 மணிமுதல் பிற்பகல் 3.00 மணி வரை

**இடம்:** யாழ். மத்திய கல்லூரி, தம்பர் மண்டபம்

**தலைவர்:** வைத்திய கலாநிதி வை. தியாகராஜா J.P,
(தலைவர், இ. செ. சங்கம் கோப்பாய் பிரிவு)

வரவேற்புரை: திரு. இ. மயில்வாகனம்
(செயலாளர், இ. செ. சங்கம்— கோப்பாய்ப் பிரிவு)

பிரதமவிருந்தினர்: கலாநிதி நா. தணிகாசலம்பிள்ளை
(கல்விப் பணிப்பாளர், யாழ். கல்வி வலயம்)

சிறப்பு விருந்தினர்கள்: பெரி பேர்னன்ட் (Pirre Ferrand)
(சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்க வதிவிடப் பிரதிநிதி)

பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம்
(தலைவர், இ. செ. சங்க யாழ். கிளை)

கௌரவ விருந்தினர்கள்: திரு. வி. அருளானந்தம்
(பிரதிக்கல்விப்பணிப்பாளர்— யாழ். கல்விக்கோட்டம்)

திருமதி எஸ். காங்கேயன்
(பிரதிக்கல்விப் பணிப்பாளர் - நல்லூர் கல்விக் கோட்டம்)

திரு. எஸ். சிவஞானசுந்தரம்
(பிரதிக் கல்விப்பணிப்பாளர், கோப்பாய் கல்விக்கோட்டம்)

நன்றியுரை: திரு. க. செல்வரத்தினம்
(உப தலைவர், இ செ. சங்க கோப்பாய் பிரிவு)

**கண்காட்சியைக் கண்டு களிப்பதோடு சஞ்சிகையாளர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் பாராட்டும் வழங்கிட ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

— செஞ்சிலுவைச் சங்க நிர்வாகிகளும், பத்திரிகை பயிற்சிநெறி மாணவர்களும்.
இ. செ. சங்கம், கோப்பாய்ப் பிரிவு.

பிரசுர அன்பளிப்பு:-
**சபா பல்பொருள் நிலையம்**
பிரதான வீதி, அச்சுவேலி
(சி/7850)

---

# இன்றைய ஓடியோ CD வெளியீடுகள்!

இசைப்புயல்
A. R. ரகுமானின்
❀ சங்கமம்
❀ சுப்பமான்

ஓடியோ CD க்கள் விற்பனைக்கு உண்டு.

**மூர்த்தி வீடியோ சென்ரர்**
மானிப்பாய்
T.P. No 021 - 2884
(66534)

---

# ஸ்ரீசெல்வா

சினிமா
யாழ்ப்பாணம்
ரகுவரன், ரகு, ரேகா
**புரியாத புதிர்**
தினசரி: 10-30, 2-30
(பழைய நேரம்)
(66536)

---

# லிபேட்டி

தியேட்டர்
அச்சுவேலி
சுரேஸ்கோபியின்
**பத்ரம்**
(புதிய வெளியீடு)
காட்சிகள்; 10.30, 2.30
(பழைய நேரப்படி)
Fax No. 070-212223
FOREIGN T.P. No.
0094 -70 -212223
(66328)

---

# ராஜா

யாழ்ப்பாணம்
விஜய் - தேவயானி
ரம்பா - மணிவண்ணன்
செந்தில்
மற்றும் பலர் நடித்த
**நினைத்தேன் வந்தாய்**
10-30, 2-30
[சி/7742]

---

# நாகம்ஸ்

சுன்னாகம்.
அர்ஜுன் - ரஞ்சிதா
கவுண்டமணி - செந்தில்
நடித்த
**ஜெய்ஹிந்த்**
காட்சிகள்: 10.30, 2.30
(புதிய நேரம்)
(66513)

---

# மரண அறிவித்தல்கள்

திருவாட்டி
## கிறேஸ் தங்கரத்தினம் வடிவேலு

(இளைப்பாறிய தலைமை ஆசிரியை
வேம்படி மகளிர் கல்லூரி
பழைய மாணவியர் சங்க போஷகர்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்டவரும், யாழ். வேம்படி மகளிர் கல்லூரி—ஆரம்ப பிரிவின் முன்னாள் தலைமை ஆசிரியரும், பழைய மாணவியர் சங்க போஷகருமான திருவாட்டி கிறேஸ் தங்கரத்தினம் வடிவேலு அவர்கள் 10—06—1999 அன்றுகர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

இவர் திரு. சாம் நவரட்ணசிங்கம் (கொழும்பு), திருமதி அரியமலர், அழகரட்ணம் (கொழும்பு), காலஞ்சென்ற ஜெயரட்ணசிங்கம், திரு. ரெஜினோல்ட் செல்வராஜசிங்கம் (ஜெயா - லண்டன்) ஆகியோரின் அன்பு சகோதரியும், திரு. திருமதி ஜெகநாதன் (ஜெகன் - உடுவில்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (12— 06— 1999) சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு உடுவிலில்உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
ஜெகநாதன் (ஜெகன்)

பெனியேல்,
மானிப்பாய் வீதி,
உடுவில். (சி/7855)

---

செல்வி
## சிவபாக்கியம் சின்னத்தம்பி

(இளைப்பாறிய விஞ்ஞான பட்டதாரி ஆசிரியை)

கோப்பாய் தெற்கு இருபாலையைச் சேர்ந்த செல்வி சிவபாக்கியம் சின்னத்தம்பி (இளைப்பாறிய விஞ்ஞான பட்டதாரி ஆசிரியை) அவர்கள் 10-6-99 அன்று காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சின்னத்தம்பி, பர்வதம் அவர்களின் இரண்டாவது புத்திரியும், காலஞ்சென்ற ஆசிரியை மார்க்கண்டு அற்புதம், தையல்நாயகி, பங்கயலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற அதிபர் மார்க்கண்டு, சித்தானந்தன் ஆகியோரின் மைத்துனியும், முருகானந்தன் (அவுஸ்திரேலியா), கிருபானந்தன் (அமெரிக்கா) ஆகியோரின் சிறிய தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை இன்று (11-6-99) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று இருபாலை குடும்ப மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்:
இ. சித்தார்த்தன்
(மைத்துனர்)

கற்பகப்பிள்ளையார் கோயிலடி,
இருபாலை. (66535)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

காஷ்மீர் யுத்தத்தின் மத்தியில்

# படை முகாம்களில் வெடி கொளுத்தி கிரிக்கெட் வெற்றி ஆரவாரம்!



பெங்களூர், ஜூன் 11

உலகக் கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் 'சுப்பர் சிக்ஸ்' ஆட்டத்தில் இந்திய அணிபாகிஸ்தானை 47 ஓட்டங்களால் வெற்றி பெற்றதை அடுத்து இந்தியர்கள் அதனைக் கோலாகலமாகக் கொண்டாடிவருகின்றனர்.

ஆட்டம் முடிவடைந்ததும் இந்தியாவின் சகல பகுதிகளிலும் வெடிகளும், வாணவெடிகளும் கொளுத்தப்பட்டன, ரசிகர்கள் கார்களின் மீதும் பஸ்கள் மீதும் ஏறி நின்று இரவிரவாக நடனமாடினர்.

இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையில் கடந்த பல தசாப்தங்களாக மோதல்களும், முறுகல்களும் நிலவி வந்தபோதிலும் கடந்த மூன்று வாரகாலமாக எல்லைக் கோட்டுப் பகுதியில் கடும் மோதல்கள் ஏட்பட்டு மற்றொரு யுத்தம் ஏற்பட்டு விடுமோ என அஞ்சப்படும் சூழ்நிலையில் இந்த கிரிக்கெட் போட்டி இரு நாடுகளில் மட்டுமன்றி உலக நாடுகளிலும் பரபரப்பாக அவதானிக்கப்பட்டது.

ஸ்ரீநகரில் கடும் யுத்த சூழ்நிலையிலும் இந்திய பரா துருப்புக்கள் தங்கள் தங்கள் முகாம்களில் வான வெடிகளைக் கொளுத்தி கிரிக்கெட் வெற்றியைக் கொண்டாடி உள்ளன:

''நாங்கள் இப்போது கிரிக்கெட்டில் பாகிஸ்தானியரை வென்றுள்ளோம்: அதேபோல் கார்கில் பகுதியில் நடைபெறும் போரிலும் அவர்களைத் தோற்கடிப்போம்'' என்று இந்திய ஓட்டோ சாரதி ஒருவர் ரொய்ட்டர் செய்தியாளரிடம் தெரிவித்துள்ளார். (ஐ)

[இந்தியப் படை வீரர் ஒருவர் கடமையில் இருந்தவாறு கிரிக்கெட் நேர் முகவர்ணனையை வானொலிப் பெட்டிமூலம் செவிமடுக்கிறார்]

# இந்தியப் படையினரின் தாக்குதல் தொடர்கிறது

புதுடில்லி, ஜூன் 11

ஜம்மு காஷ்மீரில் கார்கில் மற்றும் வேறு சில பகுதிகளிலும் ஊடுருவல் காரர்களுக்கு எதிரான தமது நடவடிக்கைகளை இந்திய இராணுவத்தினரும் விமானப்படையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

பட்டாலிக் பிரிவில் உள்ள ஊடுருவல்காரர்களை நான்கு தொடக்கம் ஐந்து கிலோ மீற்றருக்கு அப்பால் விரட்டி அடித்துள்ளதாகவும் இச்சம்பவத்தில் ஊடுருவல் காரர்களுக்கு பலத்த உயிர்ச் சேதம் ஏற்பட்டதாகவும்—

இந்திய படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

மூஸ்கோ பள்ளத்தாக்கின் பல நிலைகளை இந்திய இராணுவம் கைப்பற்றியுள்ளது. ராஷ் பகுதியிலும் இந்திய இராணுவம் முன்னேறி வருகிறது ஆனால் ஊடுருவல் காரர்களினதும் பாகிஸ்தான் இராணுவத்தினதும் தீவிர துப்பாக்கிச் சண்டையை அவர்கள் எதிர் கொண்டு வருகின்றனர்.

இராணுவ நடமாட்டம் மற்றும் புதிதாக இராணுவம் வருவதைச் சீர்குலைக்கும் நோக்குடன் ஸ்ரீ நகர் நெடுஞ்சாலையில் பாகிஷ்தான் இராணுவம் கடும்பீரங்கித் தாக்குதலை நேற்று முன் தினம் மேற்கொண்டது.

கார்கில், ராஷ் பட்டாலிக் பிரிவுகளில் எல்லைக் கட்டுப் பாட்டுக் கோட்டு நெடுகிலும் உள்ள எல்லைப்புற கிராமங்கள் மீது பாகிஸ்தான்படைகள் தாறுமாறாகச் சுடத் தொடங்கியுள்ளன. இதனால் 12 வீடுகள் சேதமடைந்துள்ளன என்று இந்தியா குற்றஞ் சாட்டியுள்ளது.

இப்பகுதியில் உள்ள மக்கள் ஏற்கனவே வெளியேறியதால் பலத்த உயிர்ச்சேதங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. (ஐ-க)

## காஷ்மீர் ஊடுருவலுக்கு அமெரிக்கா கண்டனம்

காஷ்மீரில் இந்தியக் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்துக்குள் ஊடுருவியுள்ளவர்கள் எங்கிருந்து வந்தார்களோ அந்த இடத்துக்கு மீண்டும் திரும்பிவிட வேண்டும் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதிக்கு தெற்காசிய விவகாரம் தொடர்பாக ஆலோசனை வழங்கிவரும் உதவியாளர் புரூஸ் ரீடெல் வாஷிங்டனில் செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றிய போது இந்திய எல்லைப் பிரதேசத்தை விட்டு ஊடுருவல் காரர்கள் வெளியேறிவிட வேண்டும் என்று தெரிவித்தார்.

''இந்திய — பாகிஸ்தான் எல்லைக் கட்டுப்பாட்டு பிரதேசம் 1972 ஆம் ஆண்டிலேயே நிர்ணயிக்கப்பட்டு விட்டது; இது தொடர்பாக இப்போது எவ்வித சர்ச்சைக்கும் இடமில்லை; ஊடுருவல்காரர்கள் எங்கிருந்து வந்தார்களோ அந்த இடத்துக்கு திரும்பிவிட வேண்டும்'' என்று அவர் தெரிவித்தார். [ஐ]

உலக அரங்கில்

உருக்குலைந்த நிலையில்

## இந்தியப் படையினரின் சடலங்கள் ஒப்படைப்பு

புதுடில்லி, ஜூன் 11

கடந்த 6 ஆம் திகதி ஊடுருவல் காரர்களின் திடீர் தாக்குதலில் கொல்லப்பட்ட ஆறு இந்திய இராணுவத்தின் உடல்களை நேற்று முன் தினம் கார்கில் பகுதியில் வைத்து பாகிஸ் தானிய படையினர் இந்திய இராணுவத்திடம் ஒப்படைந்தனர்.

மிகவும் சிதைந்த போன நிலையில் அந்த சடலங்கள் காணப்பட்டதாகவும்—

காட்டு மிராண்டித் தனமாக சடலங்கள் கையாளப்பட்டுள்ளன எனவும்—

சில சடலங்களின் கண்கள் பிடுங்கப்பட்டிருந்தன என்றும்—

இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர் (ஐ-க)

## புதுடில்லி வர முன் சீனாவுக்கு விஜயம்

இஸ்லாமாபாத், ஜூன் 11

பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் சர்தாஜ் அஸீஸ் நாளை புதுடில்லி செல்வதற்கு முன்பாக திடீர்ப்பயணமாக சீனா செல்லவுள்ளார் என இஸ்லாமாபாத் தெரிவித்துள்ளது.

நாளை சனிக்கிழமை சர்தாஜ் அஸீஸ் இந்தியா செல்லவுள்ளார் என்பது தெரிந்ததே.

இதேவேளை—

இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வர் சிங்கும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை சீனா செல்லவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. [ஐ-க]

## கார்க் குண்டுகள் மீட்பு!

ஸ்ரீநகர், ஜூன் 11

காஷ்மிரில் முக்கிய அமைச்சர்களையும் அரசியல் வாதிகளையும் குண்டு வைத்து கொலை செய்ய பாகிஸ்தானின் ஐ எஸ்; ஐ; உளவு அமைப்பு மேற்கொள்ள இருந்த திட்டத்தை முறியடித்து விட்டதாக இந்திய ராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வெளிநாட்டு கூலிப்படைகளுடன் நடந்த ஒரு மணி நேர சண்டையின் பின் செவ்வாயன்று காஷ்மீரின் தென்பகுதியில் கார்களில் பொருத்தி வைக்கப்பட்டிருந்த 5 சக்தி மிக்கு குண்டுகளை படையினர் கண்டுபிடித்ததாக பிரிகேடியர் எஸ். கே. சௌத்ரி தெரிவித்தார்.

முக்கிய அரசியல் தலைவர்களைக் கொலை செய்வதற்கு இந்தக் கார் குண்டுகளைப் பயன்படுத்த பாகிஸ்தான் திட்டமிட்டிருந்ததாக [illegible]



கொசோவோ நெருக்கடிக்குத் தீர்வுகாணும் பேச்சுவார்த்தைகள் ஜேர்மனியில் நடைபெறுகின்றன. அமெரிக்க வெளியுறவுச் செயலர் மெடலின் அல்பிறைற்ரஷ்ய பிரதிநிதி இகோர் இவானோவ், ஜேர்மன் வெளிவிவகார அமைச்சர் ஜொஷ்கா பிஷ்ஷர் ஆகியோர் பேச்சுவார்த்தை மேசையில் காணப்படுகின்றனர். (ஐ)

# படை வாபஸுக்கு யூகோ. இணக்கம்!

மசிடோனியா, ஜூன் 11

கொசோவோ பிரச்சினைக்கு தீர்வுகாணும் முகமாக நடத்தப்பட்ட முக்கிய பேச்சு வார்த்தைகளில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. கொசோவோவில் இருந்துசேர்பிய படையினரை வாபஸ் பெறுவதற்கு யூகோஸ்லாவியா இணக்கம் தெரிவித்துள்ளது

ஆனால் சேர்பியப் பொலீஸாரும் இராணுவத்தினரும் இன்னமும் கொசோவோவை விட்டு வெளியேறவில்லை, இவர்கள் நேற்றுமுதல் வெளியேறத் தொடங்குவர் என்று யூகோஸ்லாவிய வெளிவிவகார துணை அமைச்சர் தெரிவித்தார். ஆனால் நேற்று இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை படை வாபஸ் ஆரம்பமாகவில்லை. சேர்பியப் படைகள் வெளியேற ஆயத்தமாகி உள்ளதாக பென்டகன் பேச்சாளர் தெரிவித்தார்.

கொசோவோ பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தைகள் ஜேர்மனியில் நடைபெறுகின்றன.

ஜேர்மன் பேச்சுவார்த்தைகளில் எட்டப்பட்டுள்ள இணக்கத்தின்படி —

நேட்டோ படைகள் கொசோவோவை விட்டு வெளியேற வேண்டும் —

நேட்டோ வான் தாக்குதல் நிறுத்தப்பட வேண்டும்—

50 ஆயிரம் பேர் அடங்கிய சர்வதேசப் படையின் பாதுகாப்புடன் இடம்பெயர்ந்த கொசோவோ அகதிகள் தமது சொந்த இடங்களுக்கு திரும்புதல் வேண்டும் —

இந்த நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் யூகோஸ்லாவியா மீதான வான் தாக்குதல்கள் நேற்றும் தொடர்ந்து நடைபெற்றன. (ஐ-க)

## சிகரெட் பழக்கத்தை தூண்டும் கிரிக்கெட்!

### ஆய்வில் திடுக்கிடும் தகவல்

உலகக் கிண்ணக்கிரிக்கெட் போட்டிகள் இளைஞர்கள் மத்தியில் சிகரெட் பிடிக்கும் பழக்கத்தை தூண்டுவதாக அமைந்துள்ளன.

இந்தியாவின் மருத்துவக் கழகம் நடத்திய ஆய்வுகள் மூலம் இந்தத் திடுக்கிடும் தகவல் வெளியாகியுள்ளது.

கிரிக்கெட் போட்டிகளை பார்வையிடும் 13—17 வயதுக்கு இடைப்பட்ட இளைஞர்களே இந்தப் பழக்கத்துக்கு அடிமையாகின்றார்கள் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

1996 ஆம் ஆண்டு உலகக் கிண்ணக்கிரிக்கெட் போட்டிகளை பார்வையிட்ட 6 ஆயிரம் இளைஞர்கள் இந்த ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட போது 10 வீதமானவர்கள் கிரிக்கெட் போட்டி நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது தாங்கள் புகைப்பிடிக்கத் தொடங்கியதாகத் தெரிவித்துள்ளனர்.

உலக கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளுக்கு விளம்பர ஆதரவு அளித்த சிகரெட் நிறுவனங்களே இத்தகைய நிலைக்கு காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

கிரிக்கெட் வீரர்கள் அணியும் சட்டைகளில் 'வில்ஸ்' சிகரெட் கம்பனியின் சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது. இதனைப் பார்க்கும் இளைஞர்களின் மனதில் சிகரெட்டைப் பிடிப்பதனால் தாங்களும் கிரிக்கெட் வீரர்கள் ஆகலாம் என்ற எண்ணம் தோன்றுவதனாலேயே சிகரட் பிடிக்கும் பழக்கத்துக்கு தூண்டப் படுகிறார்கள் என்றும் அந்த ஆய்வு மேலும் தெரிவிக்கின்றது. (ஐ-க)

## எட்வேர்ட் - சோபி திருமணம்

லண்டன், ஜூன் 11

பிரித்தானிய இளவரசர் எட்வேர்ட்டுக்கும் சோபி ஜோன்சுக்கும் எதிர்வரும் 19 ஆம் திகதி திருமணம் நடைபெறவுள்ளது.

இந்தத் திருமணம் எட்வேர்ட்டின் விருப்பத்துக்கு இணங்கவே நடத்தப்பட இருப்பதாக சோபி கூறியுள்ளார்.

ஆனால் தனது திருமணத்துக்கு வருகை தரவிருக்கும் பெண்கள் தொப்பி அணியக் கூடாது என்றும் சோபி மேலும் கூறியுள்ளார்.

திருமணம் போன்ற வைபவங்களுக்குதொப்பி அணிந்து செல்வதே பிரித்தானிய பெண்களின் வழக்கமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட 240 ரக்ரர், மில்லுக்குரிய புதிய கிறைண்டர்கள் நெல் உடைக்கும் சைனிஸ் செட், பொலிசர்கள் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: திரு சிவம், மானிப்பாய். (இலங்கை வங்கி முன்பாக) 66442)

## ENGLISH / SINHALA

சகல தரங்களுக்கும் ஏற்ற வகுப்புக்கள் வழமைபோல் நடைபெறுகின்றன. பிரத்தியேக வகுப்புக்களும் ஒழுங்கு செய்து கொள்ளலாம். T. Sagathevan B A, Lond) 46, பிரப்பங்குளம் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (66514)

## இலகு திருமண சேவை

1966 விசாகம் Electronic Diploma. U K மணமகனுக்கும், 1970, விசாகம் படித்த U K. மணப் பெண்ணுக்கும் பொருத்தமான மணமக்கள் U.K. இல் தேவை தொடர்பு: ஞாயிறுகளில் துரைவிலா, K K S வீதி, நாச்சிமார் கோயிலடி யாழ்ப்பாணம் [66497]

# பயண முகவர் கைது

வெளிநாடுகளில் வேலை வாய்ப்புப் பெற்றுத் தருவதாக்கூறி சுமார் 50 தமிழ்இளைஞர், யுவதிகளிடம் பல லட்சம் ரூபாவைப் பெற்றுவிட்டு தலைமறைவாக வாழ்ந்த ஒருவர் நேற்று முன்தினம் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துரிகிரிய பகுதியைச் சேர்ந்த சிங்களவர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டவராவார். (ஜ-7)

# சவாரிப் போட்டி

நவக்கிரி எல்லாளன் சனசமூக நிலையத்தினரால் நடத்தப்படும் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆவரங்கால் சவாரித்திடலில் நடைபெறவுள்ளது (க-ரி)

## பாலர் ஆசிரியராக பயிற்சி

தகைமை:
க. பொ. த சாதாரணதரம், அல்லது மேல்
தபாலில் ஆறுமாதங்களில் பயிலலாம்.

**பாலர் ஆசிரியர் சங்கம்**
கொக்குவில்.
(66481)

---

யாழ். மாவட்ட
## தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூ. சங்கம்
பதிவு இலக்கம் — N J. / 01

# வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும்

மேற்படி பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும் எதிர்வரும் 23 - 06 - 99 புதன்கிழமை காலை 9-30 மணிக்கு நடைபெறும். சகல உறுப்பினர்களையும் தவறாது சமுகம் தரும்படி மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். புதிய நிர்வாகத் தேர்தல் நடைபெற இருப்பதினால் சகல உறுப்பினர்களையும் கட்டாயமாக வருகை தரும்படி மீண்டும் கேட்டுக்கொள்கிறோம்.

நிகழ்ச்சி நிரல்

1) இறைவணக்கம்
2) சிறப்புரை
திரு. செ. கு. சண்முகநாதன்
(கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்)
3) தலைமையுரை
4) செயலாளர் அறிக்கை
5) சென்ற ஆண்டு அறிக்கை
6) தீர்மானங்கள்
7) புதிய நிர்வாகத் தெரிவு

நன்றி

கௌரவ செயலாளர்

215, பழையபூங்கா வீதி,
யாழ்ப்பாணம் (66528)

---

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
29 — 05 — 1943



ஆண்டவன் அடியில்
13 — 06 — 1996

திருமதி
## கமலரட்ணாவதி சுந்தரலிங்கம்
(கமலா)

திதி: 1999 06–11

பொன்னார் தெய்வத் திருவடியில் வாழ்ந்தெம்
தோன்றாத் துணையாயிருக்கும் அன்னையே!
தன்பணி தவறாது 'தரணியிலெமை உயரவைத்தாய்
நின் கமல முகம் காணாது கலங்கியே யென்றும்
சிந்தனை செய்து சிவன்தாள் பணிந்தே யாம்
உள்ளக் கமலத்தி லுனையிருத்தி
நினைவஞ்சலியுடன் புஷ்பாஞ்சலியையும் அன்னையே
நின் பொன்னடிக்கு சமர்ப்பண மாக்குகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பாசமிகு
- குடும்பத்தினர்.

1/15, 2 ஆம் ஒழுங்கை,
பலாலி வீதி,
யாழ்ப்பாணம். (66525)

---

# பாராட்டுகின்றோம்

அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட
வேதாகமப் புதிர் போட்டியில்
12 வயதுக்குட்பட்டவர்களின் பிரிவில்
சுண்டுக்குளி பரியோவான் தேவாலயத்தைச் சேர்ந்த கீழ்வரும் பெயர்களையுடைய மாணவிகள் வெற்றி பெற்றுள்ளனர் இவர்களைப் பாராட்டுகின்றோம்.

செல்வி ஏஞ்சல் சந்திரசேகரம்
செல்வி கஸ்தூரி தங்கராஜா
செல்வி டொறின் தூயகுமார்
[சுண்டுக்குளி மகளிர் கல்லூரி]

செல்வி பிளசட்மேரி அன்ரன்
[ஆங்கில திருக்குடும்பகன்னியர் மடம் பாடசாலை] (

**பரியோவான் ஆலய அங்கத்தவர்கள்.**
யாழ்ப்பாணம். (66529)

---

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

வெள்ளிவிழா நாளைய நிகழ்ச்சிகள்
## ஈழத்துக் கலை இலக்கியம்
1999 - 06 - 12 சனிக்கிழமை காலை 9 மணி

நிகழ்ச்சி நிரல்

★ தமிழ் வாழ்த்து
★ தொடக்கவுரை — பேராசிரியர்
பொ. பாலசுந்தரம்பிள்ளை (துணைவேந்தர்)
★ வாழ்த்துரை திரு. அ சோமசுந்தரம்பிள்ளை
(பேரவை உறுப்பினர்)

இயல் அரங்கு காலை 9 30 — 11-30
"ஈழத்துக் கலை இலக்கியம்"


★ தலைவர் — கலாநிதி க குணராசா
1) கலாநிதி எஸ். சிவலிங்கராஜா
ஈழத்துக் கவிதை'
2) பேராசிரியர் நா. சுப்பிரமணியம்
'ஈழத்துப் புனைகதை'
3) கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்
'ஈழத்தவரின் பிற பங்களிப்புகள்'
4) திரு. க. தணிகாசலம்
ஈழத்துக் கலை இலக்கியத்தில் முற்போக்குச் சிந்தனைகள்'
5) திரு கே. ரதிதரன்
'ஈழத்து அரங்க வளர்ச்சி'

நாட்டார் இசை காலை 11-45 — 1-15
யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற்கழகம்
வருக வருக என அன்புடன் அழைக்கின்றோம்.
(சி/7839)

---

# 90 ஆம் நாள் நினைவஞ்சலி
11-06-99

தோற்றம்
29 — 04 — 1970



மறைவு
14 — 08 — 1999

## அமரர் செனகரத்தினம் சனகேஸ்வரன்
(பாபு)
(வல்லுவத்தை, தெல்லிப்பழை)

பாசமிகு மகனே நின் பிரிவுத் துயரால்
ஈங்கு நாங்கள் அழுகின்றோம் — தாயோடு
தந்தை உடன் பிறந்தார் பெறாமக்கள் தனை
விடுத்தே மறந்து நீசென்றனையே பரமன்விதியோ
மகனே ஆயிரம் ஆயிரம் இன்பங்கள் தந்தாய்
காவியம் எனவே காலத்தில் உயர்ந்தாய்
காலமெல்லாம் காத்திருந்தோம் எம்மைக்
கைவிட்டுக் காலன் வாய்ப் புகுந்தனையே
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

நின் பிரிவால் துயருறும்
**தாய், தந்தை, சகோதரர்**

தற்காலிக விலாசம்:
திருநெல்வேலி கிழக்கு,
அரசடி வீதி,
திருநெல்வேலி. [66523]

---

உ
விராட் விஸ்வபிரம்மனே நம

# பூப்புனித நீராட்டுவிழா அழைப்பு

♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥

அன்புடையீர்!

நிகழும் பிரமாதி வருடம் வைகாசி மாதம் 28 ஆம் நாள் (11–06–99) வெள்ளிக்கிழமை 11. 53 மணி முதல் 1 00 மணிவரையுமுள்ள சித்தயோகம் கூடிய சுபமுகூர்த்தத்தில்

எமது புத்திரி
## ★★★ செல்வி அனித்திரா ★★★
அவர்களுக்கு

பூப்புனித நீராட்டுவிழா நடத்த பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து செல்வியை ஆசீர்வதிக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

தங்கள் நல்வரவை விரும்பும்
**திரு திருமதி அருள்ராசன் குடும்பம்**
678/2, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

அல்லி
ரூபி நகை மாளிகை,
111/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (66527)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலவச
## மருத்துவ பரிசோதனை

இடம்: பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை
திகதி: 13 - 06 - 1999
நாள்: ஞாயிறு
நேரம்: காலை 9 30 முதல்

கண்பரிசோதனை: Lion J; A.S. Fernando M.J.F and brother

மருத்துவ பரிசோதனை:
Lion Dr. T Arumaithurai
Lion Dr. K. Sivanadyan
Lion Dr. S. Chunderarajan

பற் பரிசோதனை:
Dr, [Mrs]. C. Gnaneswaran

பெயர் பதிவு செய்தல்: 13 - 06 - 1999 காலை 8.30 மணி.

செயலாளர்.
மானிப்பாய் கோவில்பற்று லயன்ஸ் கழகம்.

(66504)


# கப்பலில் வந்த நோயாளி மரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

கொழும்பில் மேலதிக சிகிச்சைக்காக சென்று திரும்பிய நோயாளி ஒருவர் நேற்று முன்தினம் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின கப்பலில் வந்து கொண்டிருந்த சமயம் இடைவழியில் மரணமானார்.

இவரின சடலம் செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளின் உதவியுடன் கப்பலில் இருந்து காங்கேசன்துறைமுகத்தில இறக்கப்பட்டு அவர்களது வாகனமூலம் அவரது சொந்த இடத்திற்கு அனுப்பப்பட்டது.

நுணாவில் பகுதியைச் சேர்ந்த இவரின் பெயர் விவரம் உடனடியாகத் தெரிய வரவில்லை (ஐ 15)

# பரிசளிப்பு விழா

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் நூலகம், சிறுவர் பூங்கா என்பவற்றின் ஆரம்ப விழாவும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் கி. நடராஜா தலைமையில் கல்லூரியின் திறந்த வெளி அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினர்களாக யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளையும், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி. சிவராஜாவும் கலந்து கொள்ளவுள்ளனர். (க-ரி)

# இலவச மீட்டல் வகுப்பு

வலி, கிழக்கு ஜூன் 11

கோப்பாய் கோட்டக் கல்வி அபிவிருத்திச் சபையினால் ஜி. சீ. ஈ உயர்தர வகுப்பு கலைப்பிரிவு மாணவர்களுக்கான இலவச மீட்டல் பயிற்சிக் கருத்தரங்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபத்தில் நடத்தப்பட்டு வருகின்றது.

இக் கருத்தரங்கில் கலைப் பிரிவு பாடங்களுக்கான விரிவுரைகள் இடம்பெற்று வருகின்றன (ஐ-180)

# மாகாண அதிகாரி விஜயம்

தென்மராட்சி, ஜூன் 11

வடக்கு — கிழக்குமாகாண ஆளுநருடன் யாழ்ப்பாணம் வந்த மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் க. சபாபதிப்பிள்ளை நேற்று முன்தினம் சாவகச்சேரி நகரசபைக்கு உத்தியோக பூர்வ விஜயத்தினை மேற்கொண்டு அபிவிருத்தி சம்பந்தமான விவரங்களைக் கேட்டறிந்தார். (ஐ-117-31)


# மலிவு விற்பனை

நாளை 12 - 06 - 99 சனிக்கிழமை
STOCK CLEARANCE SALE

ஆடவர், மகளிர், குழந்தைகளுக்கான ஆடை வகைகளும்
விசேஷமாக இறக்குமதி செய்யப்பட்ட
Ⓒ சேட், Ⓒ ரீசேட் மற்றும்
Ⓒ றெடிமேட் வகைகள், Ⓒ சூட்டிங் வகைகள்,
Ⓒ துணி வகைகள்


என்பனவற்றைமலிவு விலையிற் பெற்றுக் கொள்ள

## மோகனம்

இல 41, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.

[66512]


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 08 – 01 – 1980 | 28 – 05 – 1998 |

செல்வன்

## பரராசசிங்கம் பிரகலாதன்

(பிரகாஷ்)

[உயர்தர வகுப்பு மாணவன், நயினாதீவு மகாவித்தியாலயம்]

திதி: 11 – 06 – 1999

என் இனிய பிரகாஷே! எங்கே நீ போய்விட்டாய்?
உன்னுடலே காணாது உள்ளம் வெடிக்குதெடா
புன்னகை பூக்குமுந்தன் பொன்முகத்தை
மறப்போமா?
இன்னுமொரு பிறப்பெடுத்து என்முன்னே
வந்துவிடு!

மின்னாமல் முழங்காமல் மேலுலகம்
சென்றனையோ!
என்ன கொடுமையையா! இறைவா நீ ஏனழைத்தாய்
இன்ன வயதினிலே சேவை பல புரிந்திட்ட
மன்னன் பிரகாஷே! மறு பிறவி எடுத்தேவா?
பூரண நிலவே பொன்தோற்கும் திருமுகமே!
சாரண விளக்கே சாவரைத்த சந்தனமே!
ஊரறச்சென்றனையோ! உன்னாத்மா என்றென்றும்
சீரோங்கும் நாகம்மை திருவடியே சேரட்டும்!

— குடும்பத்தினர்

''சித்ராலயா'',
5 A வட்டாரம்,
நயினாதீவு.

(66472)

# கிளிநொச்சி மாவட்ட மாணவர் ஒன்றியம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம

அமரர் பேராசிரியர்

## அ. துரைராஜா நினைவுதின

நினைவஞ்சலிக் கூட்டம் - இரத்ததான நிகழ்வு

யாழ் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தரும், கல்விமானும், தன்னலமற்ற சேவையாளனுமாகிய அமரர் பேராசிரியர் அ. துரைராஜா அவர்களின் 5ஆம் ஆண்டு நினைவு தினத்தை யொட்டி எமது ஒன்றியம் அமரர் நினைவாக நினைவஞ்சலிக் கூட்டமொன்றையும் அதனைத் தொடர்ந்து இரத்த தான நிகழ்வு ஒன்றையும் ஒழுங்கு செய்துள்ளது.

இந்நிகழ்வில் அனைவரையும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இடம்: மருத்துவ மண்டபம், யாழ் பல்கலைக்கழகம்
காலம்: 13 06-99 [ஞாயிறு] காலை 9 00 மணி

குறிப்பு: அமரர் நினைவாக இரத்ததானம் செய்ய விரும்புவோர் குறித்த தினத்தில் இரத்த தானம் செய்யலாம் என்பதை அன்புடன் அறியத்தருகின்றோம்.

விளம்பர அன்பளிப்பு:
வீல் மூவர்ஸ் தொலை தொடர்பு சேவை
021 - 2179 (FAX)
021 - 2443 021 - 2047
நல்லூர். யாழ்ப்பாணம்

ஒட்டோ சப்ளையர்ஸ்
ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்.

(66507)


# NEWTON
SCIENCE CENTRE

342, ஸ்ரான்லி வீதி, யாழ்.

GENERAL CHEMISTRY
A/L 2001


ஆரம்பம்: 12 - 06 - 99
மாலை 3 00

திரு. அன்பு

[சி/7841]


# 31 ஆம் நாள் நினைவலைகள்

[11 - 06 - 1999]



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 08 – 09 – 1924 | 12 – 05 – 1999 |

அமரர்

## ஆறுமுகம் ஆசைப்பிள்ளை

[இளைப்பாறிய உப - அதிபர்]

பொன் காட்டும் நிறம் காட்டிப்
பூக்காட்டும் விழி காட்டிப்
பண் காட்டும் மொழி காட்டிப்
பையவே நடை காட்டிப்
பரமனடி சேர்ந்திட்டாயே!

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

குடும்பத்தினர்.

பாடசாலை வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

[66493]

உ
சிவமயம்
சித்தன்கேணி

# ஸ்ரீசிவகாமசுந்தரி சமேத ஸ்ரீசிவசிதம்பரேஸ்வரர் தேவஸ்தானம்

## பிரமாதிவருஷ மஹோற்சவ பெருவிழா

கொடியேற்றம்: 12 - 06 - 99 சனி காலை 10.30 மணி
பஞ்சரதபவனி: 20 - 06 - 99 ஞாயிறு காலை 8 00 மணி
நடராஜர் அபிஷேகம்: 21 - 06 - 99 திங்கள் அதிகாலை 4 00 மணி
தீர்த்தவாரி: காலை 10.00 மணி

மஹோற்சவ குரு: ''சித்தாந்த பண்டிதர், [சிவாகமவித்தஜோதி]''
சிவஸ்ரீ. கு. ஜெகதீஸ்வரக்குருக்கள் (புன்னாலைக் கட்டுவன்)

சுபம்!

பெருவிழா சிறப்பாக நடைபெற்று அனைவருக்கும் சுகபோகம் மிக்க பெருவாழ்வு கிடைக்க அம்மை அப்பனை பிரார்த்திக்கும்,

பாக்கியரத்தினம் காட்வெயர் ஸ்ரோர்ஸ்,
162, 163, பிரதான வீதி,
சங்கானை.

தரன் ரேடேஸ்,
130, பிரதான வீதி,
சங்கானை.

(66480)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி சபைகள் செயற்பட அரசு ஒத்துழைப்பு வழங்கவில்லை

## புளொட் பிரமுகர் குற்றச் சாட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ் மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைகளின் செயற்பாடுகளுக்கு அரசு ஒத்துழைப்பு வழங்கவில்லை.

இவ்வாறு புளொட் அமைப்பின் யாழ் ம வட்ட அமைப்பாளரும் யாழ். மாநகரசப உறுப்பினருமான செ.கிருபைராசா குற்றஞ்சாட்டி உள்ளார்.

வடக்கு — மாகாண ஆளுநர் உள்ளூராட்சி சபைத் தலைவர்கள மற்றும் உறுப்பினர்களுடன் கடந்த 8 ஆம் திகதி யாழ். செயலகத்தில் நடத்திய சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் அவர் மேலும் கூறியதாவது:-

உள்ளூராட்சி சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பல உறுப்பினர்கள் பயம் காரணமாக இராஜினாமா செய்துள்ளார்கள். இவ்வாறு இராஜினாமா செய்தவர்களுக்குப் பதிலாக புதியவர்களை தெரிவு செய்து அவர்களது பெயர்ப் பட்டியல்களைசமர்ப்பித்து 5மாதங்களாகியும் இதுவரையும அவர்கள் நியமிக்கப்படவில்லை.

உள்ளூராட்சி சபைகள் இயங்கத தொடங்கிய பின்னர். யாழ். மாநகர சபையின் இரு மேயர்கள் உட்பட பல தலைவர்களும் உறுப்பினர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

தற்பொழுது தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களாக செயற்பட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு கொலைப்பய முறுத்தல்கள் விடுக்கப்பட்டு வருகின்றன,

கொலைப் பயமுறுத்தல்கள் மத்தியிலும் இந்தச் சபைகள் ஊடாக மக்களுக்கு சேவை செய்ய நாம் தயாராக இருக்கிறோம்

மக்கள் எமக்கு அளித்துள்ள வாக்குகள் காரணமாகவே நாம் சபைகளின் உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டோம்.

அந்த மக்களுக்கு சேவை செய்யும் பொழுது துப்பாக்கி குண்டுகளே பரிசாகக்கிடைக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்

ஜனநாயக வழியில் நின்று உள்ளூராட்சி சபைகளின் ஊடாக சேவையாற்றும் போது ஜனநாயகத்தின் கதவோரம் துப்பாக்கிகள் காத்திருக்கின்றன. எனவே ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை அரசு முன்னெடுக்கவேண்டும். என்றார்.

### மாநகரசபை உறுப்பினர் உரை

யாழ் மாநகரசபை உறுப்பினர் ம. மங்களநேசன் உரையாற்றும்போது கூறியதாவது:

யாழ். மாநகரசபையின் பழைய கட்டடம் புனரமைப்புச் செய்யப்பட்டு மாநகர சபை மீண்டும் பழைய இடத்தில் இயங்கச்செய்ய வேண்டும்.

யாழ் பொது நூலகத்துக்கு நூல் மற்றும் செங்கல் நிதி போன்றவை தென்பகுதியில் சேகரிக்கப்படுகின்றன. இந் நூலகத்துக்கு நிதிசேகரிப்பு மற்றும் நடவடிக்கைகள் யாவும் யாழ் மாநகர சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றார்,

### ஈ. பி ஆர். எல். எவ் உறுப்பினர்

ஈ. பி. ஆர். எல். எவ். பிரதி நிதியும் சாவகச்சேரி நகர சபை உறுப்பினருமான எஸ். மோகன் உரையாற்றும் போது கூறியதாவது:-

தென்னிலங்கையிலுள்ள உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கு சபை நடவடிக்கைகள் மற்றும் உறுப்பினரின் செயற்பாடுகள் தொடர்பாக பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. இதேபோன்று யாழ். மாவட்டத்திலுள்ள சகல உறுப்பினர்களுக்கும் பயிற்சிகள் வழங்கப்படவேண்டும்.

சபைகளின் தலைவர்களாக இருப்பவர்கள் கூட யாழ். மாவட்டத்தில் தற்பொழுது சில கடமைகளைச் செய்ய முடியாதுள்ளது. எனவே சபைத்தலைவர்களின் நடவடிக்கைகளுக்குப் படையினர் தடையாக இருக்கக் கூடாது.

சாவகச்சேரி நகரசபை மற்றும் பொதுநூலக கட்டடங்கள் தற்பொழுது பொலீஸ ரின் பாவனையிலுள்ளன, இந்த இரு கட்டடங்களும் உடனடியாக சம்பந்தப்பட்டவர்களிடம் திரும்ப ஒப்படைக்கப்பட வேண்டும் — என்றார்.

சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவரும் புளொட் உறுப்பினருமான அன்ரன் பொன்னையா பேசுகையில் கூறியதாவது:

சாவகச்சேரி பிரதேசசபை 197 சதுரக் கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டது. இப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்யவென 30 லட்சம் ரூபாவை அரசு ஒதுக்கியிருந்தது எனினும் 15 லட்சம் ரூபாவே இதுவரை கிடைத்துள்ளது. மீதி 15 லட்சம் ரூபாவை மிக விரைவில் கிடைக்க நடவடிக்கை எடுக்கவும் சாவகச்சேரி பிரதேச சபை ஒரு பரந்த பிரதேசத்தை உள்ளடக்கியிருப்பதனால் இதன் அபிவிருத்திப் பணிக்கு மேலும் நிதி தேவைப்படுவதால் மேலதிகமாக நிதி ஒதுக்கித் தர வேண்டும்.

300—500 பேருக்கு ஒரு கிராம சேவகர் என்ற விகிதத்தில் சேவைகள் தென் பகுதி மக்களுக்கு வழங்கப்படுகையில் எந்தவொரு தேவைக்கும் — செயற்பாட்டிற்கும் கிராம அலுவலரே கதி என வாழும் யாழ்ப்பாண மக்களுக்கு 500-1000 பேருக்கு ஒரு கிராம அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதனால் யாழ். மக்கள் தமது தேவைகளை உரிய நேரத்தில் கால தாமதமின்றி பெற்றுக்கொள்ள முடியாத நிலை இருப்பதுடன் கிராம சேவையாளர்களும் அதிக வேலைப்பளு காரணமாகத் தமது கடமைகளைச் சரிவரச் செய்ய முடியாத நிலைமைகாணப்படுகின்றது.

எனவே யாழ். மக்களின் நலன் கருதி கூடுதலான கிராம சேவையாளர்களை நியமிக்க வேண்டும்.

— என்றார்.

இச்சந்திப்பில் வலி வடக்கு பிரதேச சபைத் தலைவர் சு. ஸ்ரீ பாஸ்கரன், வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதன் உட்பட பலர் தமது கோரிக்கைகளை ஆளுநர் முன் வைத்தனர்.

[ஐ - 5-ரீ]

## கூ. சங்கப்பிரதிநிதிகளுடன் ஆளுநர் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 11

வடக்கு—கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தன நேற்று முன்தினம்யாழ்.செயலகத்தில் வைத்து ப. நோ. கூ. சங்கத் தலைவர்கள் மற்றும் பொது முகாமையாளர்கள் ஆகியோரையும் மற்றும் விவசாய சம்மேளனப் பிரதிநிதிகளையும் சந்தித்து அவர்களது பிரச்சினைகளைக் கேட்டறிந்து கொண்டார்.

இந்தச் சந்திப்பு காலை 10 30 மணிக்கு ஆரம்பமாகி 11. 30 மணிவரை இடம்பெற்றது. இதன் பின்னர் விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்பு இடம்பெற்றது.

கூட்டுறவுச்சங்கத் தலைவருடனான சந்திப்பின்போது சகல ப. நோ. கூ சங்கங்களுக்கும் கடனடிப்படையில் பத்துசதவீத வட்டிக்கு லொறிகள் வழங்கப்படவுள்ளன என்று தெரிவித்த ஆளுநர் முதற்கட்டமாக 10லொறிகள் வழங்கப்படும் என்று கூறினார்.

யாழ் விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் உரையாற்றும் போது, யாழ். மாவட்டத்திலுள்ள சகல ப. நோ. கூ. சங்கங்களுக்கும் தொலைத் தொடர்புசேவை வழங்கப்படவேண்டும். கூட்டுறவுப் பகுதியினால் கப்பல் மூலம் பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்டு மக்களுக்கு நியாய விலையில் விற்பனை செய்யப்பட்டபோது வெளிச் சந்தை விலையைக் கட்டுப்படுத்த முடிந்தது.

தற்பொழுது இந்தக் கப்பல் சேவை வசதி இல்லாமையினால் பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்த முடியாமலிருக்கிறது.

எனவே கூட்டுறவு துறைக்கு கப்பல் ஒன்றினை வாடகைக்கு அமர்த்துவதற்கு ஏற்பாடு செய்து தர வேண்டும்.

யாழ். மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் விவசாய உற்பத்திபொருள்கள் மற்றும் நீர்வேலி ப. நோ. கூ. சங்கத்தினால் உற்பத்திசெய்யப்படும் உப்பு போன்றவற்றுக்கு கொழும்பில் சந்தை வாய்ப்பினை ஏற்படுத்தித்தர வேண்டும்.

நிவாரணப் பொருள்கள் விநியோகத்திற்கு தற்பொழுது ப. நோ. கூ. சங்கங்களுக்கு வழங்கப்படும் நிதி அதிகரிக்கப்பட வேண்டும் என்று பல கோரிக்கைகளை அவர் முன்வைத்தார்.

தென்மராட்சி ப.நோ.கூ. சங்கத் தலைவர் சி சுப்பிரமணியம், தெல்லிப்பழை ப. நோ கூ.சங்கத் தலைவர் எஸ். சிவமகாராசா, உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கத் தலைவர் எஸ் கணபதிப்பிள்ளை, கட்டைவேலி ப. நோ. கூ. சங்கத் தலைவர் எஸ். சிதம்பரப்பிள்ளை உட்பட பலர் ப. நோ, கூ. சங்கங்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் குறித்துப் பேசினர்.

இந்தச் சந்திப்பில் மாகாண அமைச்சின் பிரதம செயலாளர் ஜி. கிருஷ்ணமூர்த்தி. மாகாண கூட்டுறவு ஆணையாளர் எஸ்.சண்முகலிங்கம், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். கே.சண்முகநாதன் உட்பட மாகாண அமைச்சின் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்,

(இ-5-17-173)

## ஆஸ்பத்திரிக் குழு கொழும்பு பயணம்

யாழ் போதனா வைத்திய சாலையின் பணிப்பாளர், நிர்வாக உத்தியோகத்தர்கள் அடங்கிய குழு ஒன்று நேற்று முன்தினம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் கொழும்புக்குப் பயணமானது.

கொழும்பில் சுகாதார அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட இலங்கையின் சகல வைத்தியசாலைகளின் பிரதிநிதிகளுடனான மாநாடு ஒன்றில் கலந்துகொள்ளும் பொருட்டே அமைச்சின் அழைப்பின் பேரில் இவர்கள் கொழும்புக்குப் பயணமாயினர்.

இக்குழு யாழ் ஆஸ்பத்திரியின் மருந்துத் தேவைகள், குறைபாடுகள், அபிவிருத்திகள் தொடர்பாக இம் மாநாட்டில் கலந்துரையாடவுள்ளது.

(ஐ-15)

## வெள்ளி விழாவை ஒட்டி

## யாழ். பல்கலைக்கழகத்தில் முத்தமிழ் கலைநிகழ்ச்சி

சுன்னாகம், ஜூன் 11

யாழ் பல்கலைக்கழக வெள்ளி விழாவையொட்டி முத்தமிழ்க் கலை நிகழ்சிகள நடைபெறவிருக்கின்றன.

இயல், இசை நாடகம் என மூன்று அரங்குகள் ஒன்பது தினங்களுக்கு நடைபெறவுள்ளன.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் நெறிப்படுத்துனராக நடத்தும் இந்நிகழ்ச்சிகள் கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

நாளையும் மறுதினமும் 14ஆம் திகதியும் இயல் அரங்கும், 19 ஆம், 20 ஆம், 21ஆம் திகதிகள் இசை அரங்கும் ஜூலை மாதம் 3ஆம், 4ஆம், 5ஆம் திகதிகள் நாடக அரங்கும் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நாளை சனிக் கிழமை காலை 9 மணிக்கு [illegible] இலக்கியம் என்ற தலைப்பிலான இயல் அரங்கு நடைபெறவுள்ளது.

கலாநிதி. க. குணராசா தலைமையில் நடைபெறும் இவ்வரங்கில் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தொடக்கவுரை நிகழ்த்துவார்.

'ஈழத்துத் தமிழ்க் கவிதை' பற்றி கலாநிதி எஸ். சிவலிங்கராஜாவும், 'ஈழத்துப் புனைகதை' என்ற தலைப்பில் பேராசிரியர் நா. சுப்பிரமணியமும், ஈழத்தவரின் பிறபங்களிப்புக்கள்' என்ற தலைப்பில் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸும், 'ஈழத்துக் கலை இலக்கியத்தில் முற்போக்குச் சிந்தனைகள்' என்னும் பொருளில் க. தணிகாசலமும் 'ஈழத்து அரங்க வளர்ச்சி' என்ற தலைப்பில் கோ. ரதிதரனும் உரை நிகழ்த்துவர்.

தொடர்ந்து யாழ்ப்பாண நாட்டார் வழக்கியற் கழகத்தினர் வழங்கும் நாட்டார் இசைமாலை நடைபெறும்.

(ஐ-27)

## சமய சந்நிதிகளில்

கொக்குவில், ஜூன் 11

உரும்பிராய் ஒடையம்திப கற்பக விநாயகா ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர் வரும் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 27 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம் பெறும். (க-69)

★ ★ ★

வலிமேற்கு, ஜூன் 11

சித்தன்கேணி தளுவோடைப்பதி சிவகாம சுந்தரி சிவசிதம்பரேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்தமஹோற்சவம் நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 20 ஆம் திகதி தேர் உற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம் பெறவுள்ளன. (க-175)

★ ★ ★

வலிமேற்கு, ஜூன் 11

வட்டுக்கோட்டை விசாலாட்சி சமேத காசி விசுவநாதர் (வட்டுக்கோட்டை வீரபத்திர சிவ பெருமான்) ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (க-175)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 11

வடடுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வர சுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நாளை சனிக்கிழமை காலை 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு தேர் உற்சவமும் மறுநாள் நண்பகல் 12 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும். ( -20)

★ ★ ★

கொக்குவில், ஜூன் 11

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும்திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

எதிர்வரும் 27 ஆம் திகதி காலை 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் காலை 6 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் 29 ஆம் திகதி இரவு தெப்பத் திருவிழாவும் இடம்பெறும்.

(க-15-69)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 11

வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலய அலங்கார உற்சவத்தின் தேர்த்திருவிழா நாளை சனிக்கிழமையும மறுநாள் காலை 7 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன. (க)

## மிதிவெடி வெடித்ததில் பதற்றம்

அளவெட்டி, ஜூன் 11

வீட்டு வளவினைத்துப்புரவு செய்து பற்றைகளைக் கொளுத்திய போது மிதிவெடி யொன்று பெரிய சத்தத்துடன் வெடித்தது! அருகிலே படைமுகாம் ஒன்று உள்ளமையால் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

இச் சம்பவம் அளவெட்டி வடக்குப் பகுதியில் கடந்த செவ்வாயன்று இடம்பெற்றது.

அளவெட்டி வடக்குப்பகுதியில் மக்கள் மீளக்குடியமராத பகுதிகளில் மிதி வெடிகளில் சிக்கி கால்நடைகள் கால்களை இழந்து வருகின்றன.

(ஐ-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பணியாரம் எப்போது?

வடக்கு — கிழக்கு மாகாணத்தில் அபிவிருத்தி வேலைகள் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் மிகக்குறைவாகவே நடக்கின்றன என்பதனைச் சொல்லித் தெரிய வேண்டியது இல்லை.

அபிவிருத்தி வேலைகள் என்ன, மக்களுக்குரிய அன்றாட வாழ்க்கைக்குரிய சேவைகளைச் செய்வதற்கே — அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்கே — வக்கில்லாத நிலையிலேயே அது இயங்கிக் கொண்டிருக்கிறது.

இத்தனைக்கும் வாகனப் பதிவு வரி, மதுபான வரி, பொருள்கள் சேவை வரி அந்த வரி, இந்த வரி என்று ஏகப்பட்ட வரிகளின் கணக்கில் கோடிக்கணக்கான ரூபா பணம் இந்த மாகாண சபைக்குச் சேர்கிறது.

இவ்வாறு பெரும் நிதி வளம் சேரும் போது மக்களுக்குரிய சேவைகளை, அவர்களின் தேவைகளை வடக்கு — கிழக்கு மாகாண சபையால் நிறைவேற்ற முடியாமல் இருப்பதேன்?

மக்களின் பணத்தை அவர்களின் நலனுக்குச் செலவிடுவதற்கு அதிகாரிகள் தயங்குவதுஏன்? என்ற கேள்வி இயல்பாகவே எழுகிறது.

ஏனைய ஏழு மாகாண சபைகளும் தமதுபிரதேசங்களில் மக்களிடம் அறவிடும் வரிகளில் இருந்து கிடைக்கும் பணத்தை அம்மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு மட்டுமன்றி பெரும் அபிவிருத்தி வேலைகளைச் செய்வதற்கும் பயன்படுத்துகின்றன.

ஆனால் வடக்கு—கிழக்கு மாகாணசபைக்கு அந்த வசதி இல்லை. காரணம் இங்கு அறவிடப்படும் வரிகள் மூலம் கிடைக்கும் பணம் மத்திய அரசுக்குப் போய்விடுகிறது. ஒரு ''செம்புச் சல்லியைக்''க் கூட தனது சொந்தத்தில் செலவிட முடியாது!

இங்கிருந்து பணம்அங்கே போக வேண்டும்; அங்கிருந்து—கொழும்பிலிருந்து—கிள்ளித்தெளிப்பதையே, கிடைத்தது வரப்பிரசாதம் என்று செலவிட முடியும்.

ஏன் இந்தப் பாரபட்சமான நடைமுறை என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா? மாகாண சபை நிர்வாகம் மக்களிடம் இருந்து தான் அறவிடும் பணத்தை இங்கேயே செலவு செய்வதானால் அதனை அங்கீகரிக்கும் வகையில் சபையில்தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.

வடக்கு — கிழக்கு மாகாணசபைக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் இல்லை — அரசியல் நிர்வாகம் இல்லை. அதிகாரிகள் நிர்வாகமே 1990க்குப் பின் நடைபெறுகிறது.

இந்தக் குறைபாட்டை — இடைவெளியை — சரி செய்வதற்கு நாடாளுமன்றத்தில் ஒரு விசேட சட்ட விதியை நிறைவேற்றி வடக்கு — கிழக்கு மக்களின் பணம் அவர்களுக்கே பயன்பட வகை செய்ய முடியாதா?

வடக்கு—கிழக்குமாகாண எம். பிக்கள் என்ன செய்கிறார்கள்? தாம் வேறு பிரதேசமக்களின் பிரதிநிதிகள் என்று நினைக்கிறார்களோ! வெறும் அறிக்கைகளை வெளியிட்டுச் சிலு சிலுப்புக் காட்டும் இவர்கள். நல்ல பணியாரம் செய்வது எப்போது?

# சைவமும் தமிழும் தழைத்தோங்கச் செய்து
# செங்கோல் செலுத்திய கழற்சிங்கர்

முத்திக்கு மார்க்கங்கள் மூன்று என்று தெளிவாகப் பேசுகிறது பெரிய புராணம். அவையாவன: குருவழிபாடு, சிவலிங்க வழிபாடு, சிவனடியார் வழிபாடு என்பன. சிவலிங்கவழிபாட்டால் முத்தியடைந்த முப்பதின்மரில் ஒருவராகத் திகழ்கின்றவர் கழற்சிங்கர் எனப்படும் சிவனடியார்.

திரிபுரங்களைஎரித்தவரும், கங்கையை அணிந்த நெடிய சடையை உடையவரும், இளம் பிறையைச் சூடியவருமான சிவபிரானின் திருவடிகளையன்றிப் பிறிதொன்றையும் சித்தத்தில் பேணாத இயல்போடு வாழ்ந்தார் கழற்சிங்கர். இவர் பண்டைய தமிழகத்தில் ஆட்சி புரிந்த குறுநில மன்னர்களில் ஒருவர்.

சிறந்த சிவபக்தராக விளங்கிய இவர் தனது நாட்டுக்கு வடதிசையில் ஆட்சிபுரிந்த அரசர்களைப் போரிலே வென்று அந்த நாடுகளையும் தமது நாட்டுடன் இணைத்து எங்கும் சைவசமயமும் தரும நெறியும் தழைத்து ஓங்கும்படி செங்கோல் செலுத்தி வந்தார்.

அந்த நாள்களில் சோழ நாட்டிலே தஞ்சாவூரில் வைசியரோமணி பிறந்து, எனப் புகழ்பெற்ற செருத்துணையார் எனப்படும் சிவனடியார் ஒருவர் இருந்தார். அவர் திருவாரூருக்குச்சென்று நாள்தோறும் தியாகேசப் பெருமானைவணங்கித் திருத்தொண்டுகள் செய்து கொண்டு அங்கேயே தங்கியிருந்தார்.

ஞானக் கதிர்

மனைவியாகிய மாதேவியோடு தென்னாட்டிலுள்ள சிவத்தலங்களுக்குச் சென்று, சிவதரிசனம் செய்வதையும் திருத்தொண்டுகள் செய்வதையும் வழக்கமாகக் கொண்ட கழற்சிங்கர் ஒரு தினம் திருவாரூருக்குச் சென்றார். கழற்சிங்கர் கோவிலுட் சென்று தியாகேசப் பெருமானை வணங்கி நின்றபோது —

மாதேவி திருக்கோவிலை வலம்செய்து அதன் சிறப்புகள் எல்லாவற்றையும தனித்தனியே பார்த்துக் கொண்டு திருமாலை தொடுக்கும் மண்டபத்தின் பக்கம் வந்தார். அந்த இடத்தில் அழகான அன்றலர்ந்த மலர் ஒன்று நிலத்தில் கிடக்கக் கண்டு அதை எடுத்து முகர்ந்தார்.

சிறிது தூரத்தில் ஏதோ திருத்தொண்டில் ஈடுபட்டிருந்த செருத்துணையார், மாதேவி மலரை மணந்தது கண்டு அவர் புஷ்பமண்டபத்துள் சென்று தான் அதை எடுத்தார் என்று எண்ணி மிகுந்த கோபத்துடன் ''ஏ சிவந்துரேகீ இறைவனுக்குச் சாத்துதற்கென்றே கொய்து வந்த மலரை மணந்து அபசாரம் செய்து விட்டாயே'' என்று கூறியபடி ஓடிச்சென்று அவருடைய கூந்தலைப்பற்றி இழுத்து வீழ்த்தி மூக்கை அரிந்தார்.

மாதேவி வேதனையுடன் நிலத்தில் கிடந்து புலம்பினார். அந்தச் சமயம் தியாகேசப் பெருமானைத் தரிசித்து விட்டு வீதிவலம் வந்த கழற்சிங்கர் அந்த இடத்திற்கு வந்தார். மனைவியின் அவல நிலையை அவதானித்து மிகவும் சீற்ற மடைந்து ''சிறிதும் அஞ்சாமல் இந்தக் கொடிய செயலைச் செய்தவன்யார்'' என்றவினவினார்.

''இவர் இறைவனுக்குச் சாத்துதற்கு உரியதாகிய மலரை எடுத்து முகர்ந்தமையால் நானே இப்படிச் செய்தேன்'' என்றார் செருத்துணையார். அவரை நோக்கி ஏளனமாகச் சிரித்த கழற்சிங்கர் ''புஷ்பத்தை எடுத்த கையை அன்றோ முதலில் துணித்திருக்க வேண்டும்'' என்று கூறித் தமது உடைவாளை உருவிப்பட்டத்து தேவியின் கையை வளையல்களுடன் துணித்தார்

'கட்டிய உடைவாள் தன்னை
உருவி அக் கமழ் வாசப் பூ
தொட்டு முன் எடுத்த
கையையே முற்படத்
துணிப்பது என்று
பட்டமும் அணிந்து காதல்
பயில் பெருந்தேவியான
மட்டவிழ் குழலாள் செங்கை
வளையொடும் துணித்தார்
அன்றே'.

[பெரியபுராணம்]

அந்த நிகழ்ச்சியைக் கண்ட விண்ணவர் களி புற்று மலர் மாரி பொழிந்தனர். எல்லையற்ற சிவபக்தியின் காரணமாக யாரும் செயற்கரிய செய்கையைச் செய்த கழற்சிங்கர் நெடுங்காலம் சைவ நெறி தழைத்து ஓங் அரசியற்றி வாழ்ந்து பரமசிவனுடைய திருவடி நீழலை அடைந்தார். ★

மூளாய் அருணாசலம்

# ஆற்றல், ஆளுமை, அணுகுமுறை
# மொத்த வடிவமுமாய் திகழ்ந்தவர்

யாழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் அமரர் அ. துரைராஜ வின் 5 ஆவது ஆண்டு நினைவு நாள் இன்றாகும். அதனை ஒட்டி இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.

பேராசிரியர் வ. ஆறுமுகம்
கல்வியியல் துறை,
யாழ் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் அழகையா துரைராசாவின் மறைவு எமது சமூகத்தில் ஏற்படுத்திய வெற்றிடம் எவராலும் நிரப்பப்பட முடியாத ஒன்றாகும். தன்னுடைய அறிவு, ஆற்றல், ஆளுமை, அணுகுமுறை என்பவற்றால் அவர் தனக்கென ஒரு தனியிடத்தை, தனி மதிப்பைப் பெற்றிருந்தார். அத்தகைய ஒருவருடைய மறைவு, எந்தக் கோணத்திலிருந்தும்பார்த்தாலும், சமூகத்திற்கு ஏற்பட்டுள்ள பாரிய இழப்பேயாகும்.

பொறியியற் பரப்பில், குறிப்பாக குடிசார் பொறியியலில், பேராசிரியர் துரைராசாவின் பெயரும் புகழும் நிலையானஇடத்தைப்பெற்றுவிட்டன. அவருடைய ஆய்வு நுட்பமும், திட்பமும் 'துரையின் கோட்பாடு'' Thurai's Theory' என்று அறிவியல் உலகம் அங்கீகரிக்கும் அளவுக்கு மேன்மை பெற்றது. அப்படியான ஒருவர் மற்றவர்களிடத்தும் அறிவியற் சிந்தனையையும், ஆய்வு ஈடுபாட்டையும் வளர்க்க முனைந்தது இயல்பான செயற்பாடேயாகும்.

யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தராக அவர் கடமையாற்றிய ஆறு ஆண்டுகளில் (1988-1994) அவருடைய முத்திரை சிறப்பாக ஆய்வுப் போக்கில் பொறிக்கப்பட்டதைக் காணலாம். ஆய்வுகளைப் பற்றிச் சிந்திக்கும்போது, ஓர் ஆய்வாளன் ஆய்வினை மேற்கொண்டால் மட்டும் போதாது. அவன் தான் கண்டவற்றைப் பிறருக்கும் பரப்புதல் வேண்டும். ஒன்றோடொன்று இணைந்த அந்த இரண்டும் செவ்வனே சிறப்புற நிதி தேவை. 'துரை'யின் காலத்தில் யாழ் பல்கலைக்கழகத்தில் நிதிக் குறை ஏற்பட்டது கிடையாது ஆய்வுக்குத் தேவையான நிதியைப் பெற்றுக் கொடுப்பதில் அவர் காட்டிய அக்கறை அதற்கு வழி வகுத்தது.

பல்கலைக்கழகத்தில் மட்டுமல்லாமல் அதற்கு வெளியிலும் அறிவியல் ரீதியான ஆய்வு நோக்கு வளர்ச்சி பெறவேண்டும் என்பதில் அவருக்கிருந்த ஆர்வம் 'யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின்' பிறப்பில முழுமை பெற்றது. அப்படியான ஓர் அமைப்பு அவருடைய உள்ளத்தில் கருக்கொண்டு, அதன் ஸ்தாபிதத் தலைவர் என்ற வகையில் அவருடைய வழிநடத்தலில் நிலை பெற்றது. எமது சமூகத்துக்குக் கிட்டிய பாக்கியம் எனக் கூறலாம்.

'பல்கலைக்கழகம் ஒரு தங்கக் கோபுரம்' என்றபழைய எண்ணம்மாறி, அது சமூகச் செயற்பாட்டுக்கு உந்துசக்தியாக விளங்கவேண்டும் என்ற இன்றைய சிந்தனைகளுக்குச் செயல்வடிவம் கொடுப்பதாக அவருடைய பணிகள் பரந்தன. பல்கலைக்கழகம் சமூகத்தினுள் செல்லவும் சமூகம் பல்கலைக்கழகத்துடன் இணையவும் ஊடகமாக அமரர் துரைராசா வழி சமைத்தார். அவருடைய ஆளுமை அந்த இணைப்பைச் சர்வசாதாரணமாக்கியது.

'எல்லோருக்கும் கல்வி' என்ற இக்காலப்போக்கிற்கேற்ப அவருடைய சிந்தனையும் செயலும் விரிந்தன.

பல்கலைக்கழகத்திலுள்ள அறிவுவளம், ஆளணி வளம் என்பன சமூகத்தின் சகல மட்டத்தினருக்கும பயன்படும் வண்ணம் பல கற்கை நெறிகள், திட்டங்கள் அவருடைய காலத்தில் உருவாக்கப்பட்டன. அவற்றுள் சிறப்பாகக் குறிப்பிடக் கூடியவை தொழிலாளர் கல்வி, புறநிலைப்படிப்பு அலகுகள் என்பன. இவற்றுக்கூடாக சாதாரண குடிமகனும் தன் அறிவை வளர்த்து விசாலிக்கச் செய்யச் சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றன. இவற்றின் நடைமுறையில் இணைந்தவர்களுக்கு இவற்றின் பின்னணியில் பேராசிரியர் துரைராசாவின் பங்களிப்பு நன்கு புலப்படும்.

அவருடைய வாழ்க்கை பிறருக்குஓர் எடுத்துக்காட்டு. கடமையே கண்ணாகக் கொண்டு வாழ்ந்தவர். கடமையைச் செய்து பலனைக் கண்டவரே தவிர பலனைக் கருதிக் கடமையைச் செய்தவர் அல்லர். அவரைத் தேடி வந்த புகழ் அனைத்தும் அவருடைய தன்னலமற்ற சேவையின் விளைவு என்பது பொருந்தும். யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தராக இருந்த காலகட்டத்தில், குறிப்பாக 1990-க்குப் பிற்பட்ட 'போர்க்காலச் சூழலில்' எத்தனையோ இடுக்கண்களுக்கும் மத்தியில் தன்னலம் இல்லாமல் அவர் தொழிற்பட்ட விதம் அவருடன் கூடவேலை செய்தவர்களுக்குத் தான் தெரியும். ''மெய்வருத்தம் பாரார், பசி நோக்கார், கண் துஞ்சார்...'' என்ற பாடலுக்குப் பொருளாகச் செயல்பட்டவர் என்றால் அது மிகையாகாது. கீதையில் 'கடமையைச் செய் பயனை எதிர் பாராதே'' எனக் கண்ணன் செய்த உபதேசம் 'துரை'யின் நடவடிக்கைகளின் இலக்கணமாகியது.

பேராசிரியர் துரைராசாவின், ஏனையோருடனான தொடர்புக் கோலம் எந்தவித கெடுபிடியுமில்லாத எளிமையான ஒன்றாக இருந்தது. அவரைச் சந்திக்க விரும்பிய சகலருக்கும் இன்முகத்துடனான சந்தர்ப்பம் கிட்டியது. அவர்களை வாய் திறந்து வரவேற்பதற்கு முன்னரே அவருடைய கண்களும் முகத்தின் மலர்ச்சியும் வரவேற்றுவிடும். அந்த அளவுக்கு மனிதநேயமே உருவான ஒருவரின் கீழ் ஒன்றிணைந்து வேலை செய்ததை எண்ணிப் பெருமைப்படுகிறேன்.

மனித வாழ்வின் அநித்தியத்தை நிரூபிக்கும் வகையில் அவருடைய மறைவு திடீரென நிகழ்ந்துவிட்டது. வள்ளுவர் கூறியது போல ''நெருநல் உளனொருவன் இன்றில்லை' என்றாகிவிட்டது எனினும் அவருடைய சேவையின் செம்மை என்றும் நிலைத்து நிற்கும்.

[நன்றி:
திறந்த பல்கலைக்கழக
துரைராசா நினைவு மலர்]

### நாளை

வைகாசி 29
சனிக்கிழமை
திதி: திரயோதசி
காலை 6.27 வரை
சதுர்த்தசி
பின்னிரவு 4 00 வரை
நட்சத்திரம்: கார்த்திகை
மாலை 6.42 வரை
கார்த்திகை விரதம்
சுபநேரம்: 2 52-4 22
ராகுகாலம் 8.52 10.22
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதய வாக்கு

இறைவனின் பணிக்கு ஏற்ற ஒரு கருவியாகத் தன்னை ஆக்கிக் கொள்ள வேண்டும் என்பது மட்டுமே ஒருவனின் கவலையாக இருக்க வேண்டும்.

ராமதாசர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கோப்பாய் பகுதியில் மட்டும்

# 17 ஆயிரம் போத்தல் கள் பாவனை இன்றி அழிப்பு

வலி. கிழக்கு, ஜூன் 11

யாழ். மாவட்டத்தில் என்றுமில்லாதவாறு தென்னங்கள், பனங்கள் என்பனவற்றின் உற்பத்தி அதிகரிப்பால் கடந்த மேமாதம் மட்டும் 17 ஆயிரம் போத்தல் கள் கோப்பாய் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் அழிக்கப்பட்டுள்ளது.

கடந்த மே மாதம் இச் சங்கத்தினால் 25 ஆயிரம் போத்தல் கள் திக்கம் வடிசாலைக்கு அனுப்பப்பட்டது. மிதமிஞ்சி — விற்பனை செய்ய முடியாதிருந்த — 17 ஆயிரம் போத்தல் கள்ளே நிலத்தில் ஊற்றி அழிக்கப்பட்டுள்ளது.

இதனால் சீவல் தொழிலாளர்களும் சங்கமும் பெரும் நஷ்டத்துக்குள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாண்டு மழை வீழ்ச்சி அதிகரிப்பால் கள் உற்பத்தியும் கடந்த காலங்களை விட என்றுமில்லாதவாறு கூடியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை —

உற்பத்தியாகும் கள்ளை விற்பனை செய்ய கோப்பாய் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கப் பகுதியில் வடிசாலைகள் எதுவும் இல்லாததால் பெருமளவு கள்ளை விற்பனை செய்ய முடியாதுள்ளது.

இதேவேளை தென்மராட்சி பிரதேசத்துக்கு கைதடி வடிசாலையும் வடமராட்சிப் பிரதேசத்துக்கு திக்கம் வடிசாலையும், வலிகாமப் பிரதேசத்துக்கு சங்கானை வடிசாலையும் உள்ளன.

(ஐ-180-ரி)

### கொழும்பு ஆஸ்பத்திரியில்

# டாக்டர்கள் நாளை வேலை நிறுத்தம்

கொழும்பு, ஜூன் 11

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவிக்கு ஆள்களை நியமிப்பதில் மாகாண அரசாங்கங்களும் மத்திய அரசாங்கமும் தொடர்ந்து காட்டிவரும் அசமந்தப் போக்கைக் கண்டித்து நாளை சனிக்கிழமை வேலை நிறுத்தத்தில் குதிக்கப்போவதாக கொழும்பு ஆஸ்பத்திரிகளில் பணியாற்றும் டாக்டர்கள் கூட்டாக அறிவித்துள்ளனர்.

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவிகளுக்கு உரியவர்களை நியமிக்கும் பொறுப்பு மாகாண அரசுகளுக்கு உரியது என மத்திய அரசாங்கமும், இல்லை அது மத்திய அரசாங்கத்துக்கு உரியதுஎனமாகாண அரசுகளும் மாறி மாறி தெரிவித்து வருவதைக் கண்டித்தே தாம் மேற்படி வேலை நிறுத்தத்தில் குதிக்கப்போவதாகவும் —

மேற்படி பதவிகளுக்குஉரியவர்கள் நியமிக்கப்பட்டால் டாக்டர்கள் மற்றும் ஆஸ்பத்திரிகளில் பணியாற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் எனவும் —

டாக்டர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-7)

# குடும்பமாக புகைப்படம் எடுக்க முடியாத நிலை

அளவெட்டி, ஜூன் 11

பாதுகாப்புக் காரணங்களுக்காக குடும்பப் புகைப்படம் எடுத்துச் செல்ல முடியாத நிலையில் கண் தெரியாதவர்கள், வலது குறைந்தவர்கள், வயோதிபர்கள், நோயாளர்கள், உதவியின்றி தனித்து வாழ்வோர், நடக்க முடியாத நிலையில் உள்ளோர், பிரிந்து வாழ்வோர் பெரும்சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிய வருகின்றது.

புகைப்படம் எடுக்க அறுபது ரூபா செலுத்த வசதி இல்லாமையாலும், படம் எடுக்கும் நிலையங்களுக்கு செல்வதற்கு இயலாத நிலையிலே உள்ளதாலும், பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குடும்ப பிணக்குகள், பிரச்சினைகள் காரணமாக, கணவனைவிட்டு மனைவியும், மனைவியைவிட்டுக் கணவனும் பிரிந்துள்ள நிலையில் உள்ளவர்களும், தாய் தந்தையை விட்டுப் பிரிந்துள்ள பிள்ளைகளும், குடும்பமாக சேர்ந்து படம் எடுக்க முடியாத இக்கட்டான நிலையிலே உள்ளனர்.

நோய்காரணமாக வார்ட்டிலே தங்கிச்சிகிச்சை பெறுவோர், கொழும்புக்கு சென்றோர் ஆகியோரும் குடும்பமாக படம் எடுக்க முடியாதுள்ளது.

குடும்ப விவரப்பட்டியலில் உள்ள அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து வந்தால் மட்டுமே புகைப்படம் பிடிக்க கிராம அலுவலர்கள் அனுமதிக்கின்றனர்.

இதே வேளை—

குறிப்பிட்ட ஒரு திகதிக்கு முன்பாக படங்களைத் தர வேண்டும் என்று படையினர் பணித்துள்ளதால் பலரும் செய்வதறியாத நிலையில் உள்ளனர்.

(ஐ-13)

# சந்தைக் கட்டட வேலை

வலி. கிழக்கு, ஜூன் 11

அச்சுவேலி பொதுச்சந்தையின் மேல்மாடிக் கட்டடத்தின் இரண்டாவது கட்ட வேலைகள் ஆரம்பமாகவுள்ளதாகப் பிரதேச சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

23 லட்சம் ரூபா செலவில் பிரதேச சபையின் நிதி ஒதுக்கீட்டில் நடைபெறும் இந்தக் கட்டட வேலைகள் முடிவுற்றதும் சந்தைக்கட்டடம் மிக விரைவில் பொது மக்களின் பாவனைக்குத் திறந்து வைக்கப்படும்.

இதேவேளை —

உரும்பிராய்ச் சந்தையில் புதிதாக இரு ஆட்டிறைச்சிக் கடைகளும், மாட்டிறைச்சிக் கடைகளும் அமைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-18-ரி)

# வவுனியாவுக்குப் புதிய பரிவர்த்தனை நிலையம்

வவுனியாவில் ஸ்ரீலங்கா ரெலிக்கொமின் புதிய தொலைபேசிப்பரிவர்த்தனை நிலையம் கடந்த செவ்வாயன்று திறந்து வைக்கப்பட்டது.

இந்த தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையத்தின் மூலம் 40 ஆயிரம் இணைப்புக்கள் முதல் 2 லட்சம் இணைப்புக்கள்வரை வழங்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே வவுனியாவில் இருந்த ஆயிரம் இணைப்புக்களைக் கொண்ட பரிவர்த்தனை நிலையம் நவீன மயப்படுத்தப்பட்டு மேலதிக இணைப்புக்கள் வழங்கக் கூடிய வகையில் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

இந்த பரிவர்த்தனை நிலையம் மூலம் இந்த வருட இறுதிக்குள் வவுனியாவில் மேலதிகமாக 3 ஆயிரத்து 500 தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்படவுள்ளன.

ரெலிக்கொம் நிறுவன பிரதம நிறைவேற்று அதிகாரி கிட்டாக்கி கிமோஸ்டோ 100 இணைப்புக்கள் வழங்குவதற்கான பணிகளை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் வடக்கு—கிழக்குமாகாணரெலிக்கொம் பொது முகாமையாளர் எஸ். கனகசூரியர் உட்பட ரெலிக்கொம் நிறுவனத்தின் பல அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையத்தினை நவீன மயப்படுத்துவதற்கென 37 கோடியே 75 லட்சம் ரூபா செலவிடப்பட்டதாக ரெலிக்கொம் வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-6-164)

# தாவடியில் பெண்களுக்கு 'ரூபெல்லா' தடுப்பூசி

சண்டிலிப்பாய், ஜூன் 11

இணுவில் பகுதியை சேர்ந்த 11 வயதுக்கும் 44 வயதுக்கு மிடைப்பட்ட பெண்களுக்கு இணுவில் அரசினர் மத்திய மருந்துச்சாலையில் நேற்று புதன்கிழமையன்று ஜேர்மன் சின்னமுத்து நோய் தடுப்பு ஊசி (ரூபெல்லா) போடப்பட்டது.

ஒவ்வொருவரும் கடையில் பத்து ரூபா கொடுத்து 'சிறிஞ்' வாங்கி வந்து இந்த தடுப்பு ஊசி மருந்தினை இப்பகுதிக் கான குடும்ப சுகாதரா சேவை உத்தியோகத்தர்கள் மூலம் ஏற்றிக் கொண்டனர்.

இதே வேளை—

நாளை சனிக்கிழமை தாவடி காளி கோவிலடி பாலர் பாடசாலையிலும்—

16 ஆம் திகதி புதன்கிழமை தாவடி வடக்கிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திலும்—வைத்து ஜேர்மன் சின்னமுத்து நோய்க்கான தடுப்பூசி மருந்து போடப்பட இருப்பதாகவும்—

இப் பகுதிகளிலுள்ள பெண்கள் இந்த நிலையங்களில் வந்து இதனை ஏற்றிக் கொள்ளுமாறும்—

தாவடி குடும்ப சேவை உத்தியோகத்தர் செல்வி ச. கமலராணி தெரிவித்துள்ளார்.

(ஐ-135)

# 'கீதம்' இலக்கியப் போட்டியில் யாழ். மாணவருக்குப் பரிசுகள்

கொழும்பு, ஜூன் 11

பேராதனைப் பல்கலைக் கழக சங்கீத நாட்டிய சங்கம் 1998-99ஆம் கல்வி ஆண்டில் நடத்திய 'கீதம்' இலக்கியப் போட்டியில் பல்கலைக் கழக மட்டத்தில் நடத்தப்பட்ட கவிதை, கட்டுரை, சிறுகதை ஆகிய போட்டிகளில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் பலருக்கு பரிசுகள் கிடைத்துள்ளன.

போட்டி முடிவுகள் வருமாறு:-

பல்கலைக் கழக மட்டம்:-

**கவிதை**

1ஆம் இடம் — பிறேமினி சபாரத்தினம் (விஞ்ஞான பீடம் யாழ். பல்கலைக்கழகம்). 2ஆம் இடம் சுஜாதா சிவயோகநாதன் (யாழ். பல்கலைக்கழகம்) 3 ஆம் இடம்— ஆர். முரளீஸ்வரன் (மருத்துவபீடம் யாழ்ப்பாணம்), பூ. நகுலன் (கலைப் பீடம், யாழ். பல்கலைக் கழகம்)

பாராட்டுப் பெறும் கவிதைகள்:-

ஏ. மூனைபியா (பேராதனைப் பல்கலைக்கழகம்) எஸ். முகுந்தன் (யாழ். பல்கலைக்கழகம்) எஸ். கவிதாஞ்சலி (பேராதனைப் பல்கலைக்கழகம்) கணேசமூர்த்தி விஷ்ணுகரன் (பேராதனைப் பல்கலைக் கழகம்)சி. மைதிலி (பேராதனைப் பல்கலைக் கழகம்), கட்டுரை— முதல் மூன்று இடங்கள் வழங்கப் படவில்லை.

பாராட்டுப் பெறும் கட்டுரைகள்:-

கங்காதர்சினி கங்காதரன் (யாழ்ப்பாணம்) தர்மலிங்கம் கனிமொழி (யாழ்ப்பாணம்) ரி. சந்திரமதி(யாழ்ப்பாணம்) எம். ஜே. எம். இர்பான் (பேராதனை)

**சிறுகதை**

★ முதலாம் இடம் — சி. மைதிலி (பேராதனை) 2ஆம் இடம்— பிரேமினி சபாரத்தினம் (யாழ்ப்பாணம்)3 ஆம் இடம் — மாதுமை சிவசுப்பிரமணியம் (கொழும்பு)

ஆறுதல் பரிசு:-

வல்லிபுரம் சுகந்தன்(பேராதனை) கருணாகரன் (பேராதனை) நெ. வைகுந்தன் (பேராதனை)

ஏனையோர் வட்டத்தில் நடத்தப்பட்ட போட்டிகளில் யாழ்ப்பாணம் புத்தூரைச் சேர்ந்த வே. இளையகுடி ஸ்ரீரஞ்சினிக்கு கவிதையில் ஆறுதல் பரிசும்—

திருநெல்வேலியைச்சேர்ந்த திருமதி ஞானசக்தி கணேசானந்தனுக்கு கட்டுரையில் பாராட்டும் —

உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த ஆனந்தராஜ் கோகுலனுக்கு சிறுகதையில் 2 ஆம் இடமும்—

கைதடியைச் சேர்ந்த ச. சிவராசாவுக்கு சிறுகதையில் மூன்றாம் இடமும்—

கிடைத்துள்ளன. (ஐ-6)

# நூல்கள் கொள்வனவு

வலி. கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட ஐந்து பொது நூலகங்களுக்கு 5 லட்சரூபாவுக்கு நூல்கள் கொள்வனவு செய்ய சபை தீர்மானித்துள்ளது.

(ஐ-180)

# 40 குடும்பங்களுக்கு வீடுகள்

தெல்லிப்பழை உதவி அரசஅதிபர் பிரிவுக்குட்பட்ட அளவெட்டிப் பகுதியில் கடந்த கால இராணுவ நடவடிக்கையினால் முற்றாக வீடுகளை இழந்த வறுமைக் கோட்டின் கீழ் வாழும் நாற்பது குடும்பங்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்க ஜேர்மன் தொண்டு நிறுவனம் (ஜி. ரி. இசற்) முன் வந்துள்ளது.

ஒவ்வொரு வீடும் தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியானது. இவ் வீடுகளை அமைக்கும் பணி விரைவிலேயே ஆரம்பிக்கப்பட உள்ளதாக தெரியவருகிறது. (ஐ-13)

# முறையான நியமனக் கடிதம் இன்றி ஆசிரியர்கள் பலர் சேவையில்!

வலிகாமம் தெற்கு, ஜூன் 11

கல்விச்சேவை ஆணைக்குழு கல்வி, உயர்கல்வி அமைச்சு, மாகாணத் திணைக்களம் போன்றவற்றில் இருந்து முறையான நியமனக் கடிதங்களைப் பெற்றுக்கொள்ளாத பலர் ஆசிரியர் சேவையில் இருப்பதாகத் தெரிய வருகின்றது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இவ்வாறு முறையான நியமனக் கடிதங்களைப் பெற்றுக்கொள்ளாத அதிபர்கள், ஆசிரியர்கள், ஏனைய கல்வி சார் ஊழியர்களுக்கு அவற்றைப் பெற்றுக் கொடுப்பதற்குச் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

முறையான நியமனக் கடிதம் இல்லாதவர்கள் பாடசாலை அதிபர்கள் மூலம்விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கல்விப் பணிப்பாளர்கள் அறிவித்துள்ளனர்.

வழங்கப்பட்டுள்ள நியமனக்கடிதங்களில் 'இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியம் பெற உரிமையுடையது' என்ற கருத்து வெளிப்படையாகக் கூறப்பட்டிருப்பதுடன் இரு பக்கங்களைக் கொண்டவையாக அமையாதநியமனக் கடிதங்களைப் பெற்றுள்ளவர்கள் முறையான நியமனக் கடிதத்திற்காக விண்ணப்பித்தல் வேண்டும்.

அண்மைக் காலங்களில் வழங்கப்பட்ட பல நியமனங்கள் பல இவ்வாறு முறையான கடிதங்களாக அமையாது தற்காலிக கடிதங்களாக இருப்பதாகவும் தெரிய வருகின்றது.

முறையான நியமனக் கடிதங்களைப் பெறாமையால் விதவைகள், அநாதைகள் ஓய்வூதியம், பதிவிலக்கம் மற்றும் சுயவிவரக்கோவை போன்றவற்றைப் பூரணப்படுத்த முடியாதிருப்பதாகவும், உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருப்பதாகவும், வலயக் கல்வி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

முறையான நியமனக் கடிதங்களைப் பெறாமல் இருப்பவர்களுடைய ஓய்வூதியம் வழங்குவதில் தாமதம் ஏற்படலாம் எனவும், [illegible] யும் முறையான நியமனக் கடிதங்களைப் பெற [illegible] நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா தெரிவித்துள்ளார்.

வலிகாமம் கல்வி வலயத்தில் சுமார் ஆயிரத்து 800 ஆசிரியர்கள் கடமையில் இருப்பதாகவும் இவர்களில் சுமார் அறுநூறு பேரளவில் முறையான நியமனக் கடிதங்கள் இதுவரை பெறாமல் சேவையில் உள்ளனர் எனவும் வலிகாமம் வலய நிர்வாக உத்தியோகத்தர் எஸ். வீரசிங்கம் தெரிவித்துள்ளார்.

முறையான நியமனக் கடிதத்திற்கு விண்ணப்பிப்போர் தமது விண்ணப்பத்துடன் கல்விச்சேவை ஆணைக்குழுவால் அல்லது மாகாணக் கல்வி அமைச்சால் வழங்கப்பட்ட தற்காலிக நியமனக் கடிதத்தின் உறுதிப்படுத்தப்பட்ட நிழல்படப் பிரதி, பிரதேசக் கல்விப்பணிப்பாளரினால் பாடசாலை குறிப்பிடப்பட்டு வழங்கப்பட்ட நியமனக் கடிதத்தின் உறுதிப் படுத்தப்பட்ட நிழல்படப் பிரதி ஆகியவற்றையும் இணைத்து [illegible] ளது.

(ஐ-152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னிக்கு தூது செல்வதை விடுத்து பேரினவாதிகளை கட்டுப்படுத்துங்கள்

## சமாதானக் குழுவிடம் புளொட் கோரிக்கை

சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக தென்பகுதி மதத் தலைவர்களும், பௌத்த குருமார்களும் வர்த்தகர்களும் வன்னிக்குத் தூது செல்வதை விடுத்து பேரினவாதிகளையும் சமாதான விரோதிகளையும் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்''

இப்படி புளொட் அமைப்பு கேட்டுள்ளது.

அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;-

சிங்கள வீரவிதான இயக்கம் மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு இயக்கம் ஆகிய அமைப்புகளின் இனவாத நடவடிக்கைகளுக்கு புளொட் அமைப்பு கடும் கண்டனம் தெரிவித்துக் கொள்கிறது.

நாட்டில் பேரழிவை ஏற்படுத்தி நீண்ட காலமாக தொடரும் கொடிய யுத்தம் காரணமாக வடக்கிலும், தெற்கிலும் இளம் உயிர்கள் அழிக்கப்பட்டு இரத்த ஆறு பெருக்கெடுத்து கொண்டிருக்கும் வேளையில்—

யுத்தத்துக்கு காரணமாகவுள்ள இனப் பிரச்சினைக்கு நிரந்தரமான அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதன் மூலம் சமாதானத்தை ஏற்படுத்தி யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில்—

பேரினவாதத்தின் எச்ச சொச்சங்களான சிங்கள வீரவிதான இயக்கமும், பயங்கரவாதத்துக்கு எதிரான அமைப்பும் மீண்டும் இனவாதத்துக்கு தூபமிடும் நடவடிக்கைகள் மேற்கொள்வதை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

கடந்த காலங்களில் சிங்கள பெரமுன, பூமிபுத்திர, பௌத்த மகா சபாவ, ஜாதிக சங்க சபாவ போன்ற அமைப்புகளும் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தன.

இன்று நாட்டில் 60 சதவீத மானோர் இனங்களுக்கிடையே இணக்கம் ஏற்பட வேண்டும் சமாதானம் மலர வேண்டுமென விரும்புவதாக கணிப்பீடு ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

அரசு இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டு சமாதானத்தை ஏற்படுத்துவதில் வெற்றி காண வேண்டுமென்றால் இவ்வாறான பயங்கரவாத எதிர்ப்பு இயக்கம் என்ற பெயரில் பயங்கரவாதத்தில் ஈடுபடும் அமைப்புகளுக்கு தடைவிதிக்கவேண்டும்.

கடந்த சில மாதங்களுக்கு முன் மத்திய மலை நாட்டில் சிங்கள வீரவிதான அமைப்பு இனவாத நடவடிக்கையில் ஈடுபட்ட வேளையிலும் நாம் கண்டித்தோம். நாட்டின் தேசிய வருமானத்தின் பெரும் பகுதியை பெற்றுத் தரும் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக செயற்பட்ட அமைப்பு அவர்களுக்கு தலைமை வகிக்கும் கட்சியின் தலைமை அலுவலகத்திலும் காடைத்தனம் புரிந்துள்ளது. இந்த அநீதிக்கெதிரான போராட்டத்துக்கு எமது அமைப்பு பூரண ஆதரவை வழங்குமென்பதை தெரிவித்துக் கொள்கிறோம் — என்றுள்ளது. (இ-7)

துரைராசா

# நினைவு தினத்தை ஒட்டி இரு மாடிக் கட்டடம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசாவின் 5 ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு பல்கலைக்கழக விளையாட்டுப் பகுதிக்கென இரு மாடிகளைக் கொண்ட கட்டடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

மேற்படி கட்டடத்துக்கான அடிக்கல் நடும் வைபவம் அன்னாரின் நினைவு தினமான இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் மருத்துவப்பீடத்துக்குப் பின்னால் உள்ள பல்கலைக்கழக மைதானத்துக்கு அருகில் இடம்பெறவுள்ளது.

துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அடிக்கல்லை நடுவார். (இ-7)

## மரண அறிவித்தல்கள்

### அருட்செல்வி மேரிபப்ரிஸ்ற் சந்தியாப்பிள்ளை (தி. கு)

நாரந்தனையை பிறப்பிடமாகக் கொண்டவரும் திருக்குடும்ப அருட்சகோதரியுமான அருட்செல்வி மேரிபப்ரிஸ்ற் சந்தியாப்பிள்ளை அவர்கள் 10-06-99 வியாழக்கிழமை பாஷையூர் தி. கு. கன்னியர்மடத்தில் காலமானார்.

இவரது பூதவுடல் இன்று மாலை 3.30 மணிக்கு பாஷையூர் திருக்குடும்ப கன்னியர் இல்லத்திலிருந்து திருக்குடும்ப மாகாண இல்லத்துக்கு எடுத்துச்செல்லப் படும்.

நாளை (12-6-99) சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி பூசையுடன் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
அருட்சகோதரி மேரி வீர்ஜினி
மாகாண ஆலோசகர்)

121, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/7861)

### திருமதி கந்தையா தனலட்சுமி

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா தனலட்சுமி வியாழக்கிழமை 10-06-99 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற அரியரட்ணம் சின்னத்தங்கம் தம்பதிகளின் புத்திரியும், காலஞ்சென்ற ஓவசியர் தம்பு கந்தையாவின் அன்பு மனைவியும், திரு. க. சிவராசா (ஆசிரியர், நல்லூர் தெற்கு விக்னேஸ்வரா வித்தியாலயம்), திரு. க. கமலராசா (Norway), திரு. க. சிறிஸ்கந்தராசா (London) ஆகியோரின் அன்புத் தாயாரும், ராஜினி (பபி), சத்தியவதி (Norway), காந்தா (London) ஆகியோரின் மாமியாரும். கிரிவக்சன், பிரசாந் (மாணவர்கள், பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்), ரவிவர்மன், அருண், மிருதுலா (Norway), சர்மிலன், கரிமிலன், பிரேமிலன் ((London) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11-06-99) பிற்பகல் 3.30 மணிக்கு (S L.T) அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
க. சிவராசா
[மகன்]

'ராஜ வாசா'
151, சச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

[66541]

### கனகர் சிவக்கொழுந்து

சுதுமலை தெற்கை பிறப்பிடமாகவும் மானிப்பாய் வீதி ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. திருமதி கனகர் செல்லப்பிள்ளை தம்பதிகளின் அன்புப் புதல்வன் கனகர் சிவக்கொழுந்து 10-06-99 நேற்று 10.00 மணியளவில் இயற்கை மரணம் எய்தியுள்ளார்.

அன்னார் கனகம்மாவின் அன்புக் கணவரும், நாகராசா (திருகோணமலை), செல்வராசா (கொடிகாமம்), ஜெயராஜா (பிரான்ஸ்), வனஜா (சுவிஸ்), தவராஜா (சுவிஸ்), தங்கராசா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் மெற்றில்டா (திருகோணமலை). பரிமளாதேவி (கொடிகாமம்), விக்னேஸ்வரமூர்த்தி (சுவிஸ்), சந்திரா (சுவிஸ்), சுகந்தி (சுவிஸ்), டொலரோசா (ஆனைக்கோட்டை) ஆகியோரின் அன்பு மாமனாரும் கண்ணா (சுவிஸ்), றெஜினோல்ட் (கனடா), லதா (திருகோணமலை), வனிதா (திருகோணமலை), வனஜா, வஜி, கவிதா (கொடிகாமம்), கவிதாஸ் (கொடிகாமம்), கவிஸ்ரா (கொடிகாமம்), சசி (கொடிகாமம்), ஜெயறீகன் (ஆனைக்கோட்டை). செறின்ஜடா, டயானா, பேளி (சுவிஸ்), சேளி, சாளி (சுவிஸ்), தர்சன், நிரோசன் (சுவிஸ்) ஆகியோரின் பேரனும் கிசோனின் (திருகோணமலை) பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 11-06-99 அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் காக்கைதீவு கரையாம்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. நாகராசா
(மகன்)

மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை.

(சி/7860)

வடக்கு -- கிழக்கு மாகாண

# பரீட்சைகள், நேர்முகப் பரீட்சைகள் யாழ்ப்பாணத்திலேயே நடைபெறும்

## செய்தியாளர் மாநாட்டில் ஆளுநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 11

வடக்கு—கிழக்கு மாகாண சபையினால் நடத்தப்படும் சகல பரீட்சைகளும், நேர்முகப்பரீட்சைகளும் யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் என்று வடக்கு — கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தனா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வந்துள்ள ஆளுநர் யாழ். செயலகத்தில் வைத்து செய்தியாளர்களை நேற்று சந்தித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆளுநர் தெரிவித்த முக்கிய விடயங்கள் வருமாறு:-

★ குடாநாட்டில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அதிகாரிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக விவரங்களை இங்கு அறிந்தேன். அவற்றை அறிக்கையாகத் தயாரித்து ஜனாதிபதியிடம் சமர்ப்பித்து அவற்றைத் தீர்க்க நடவடிக்கை எடுப்பேன்.

★ இங்குள்ள திட்டங்களைச் செயற்படுத்த போதுமான அளவு நிதி கிடைப்பதில்லை என்று கூறப்பட்டது.

ஜனாதிபதியுடன் பேசிக் கூடுதல் நிதி கிடைக்க ஏற்பாடு செய்யவிருக்கிறேன்.

★ யாழ்ப்பாணத்தில் இடம்பெயர் சேவை நடத்துமாறு கோரப்பட்டுள்ளது. உடனடியாக அதை நடத்த முடியாதுள்ளது. சீரான போக்குவரத்து வசதி ஏற்பட்ட பின்பே சகல அதிகாரிகளையும் இங்கு அழைத்து வந்து இடம்பெயர் சேவையை நடத்த முடியும்.

★ வடக்கு—கிழக்கில் சுகாதார மற்றும் திணைக்களங்களில் உள்ள 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட வெற்றிடங்களும் அடுத்த ஆறு மாத காலத்துக்குள் நிரப்பப்படும். இதற்கான பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

★ வடக்கு—கிழக்குப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. புதிய ஆசிரியர்கள் நியமிக்க உலகவங்கி தடை விதித்துள்ள போதும் ஆயிரத்து 500 பேரை முதலில் திரட்டிப் பயிற்சி அளித்துப் பின்னர் அவர்களுக்கு நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.


## மலர் வெளியீடு

சித்த மருத்துவம் 97 - 98

காலம்: 12 - 06 - 1999 சனிக்கிழமை
முற்பகல் 10-00 மணி

இடம்: சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம், கைதடி

தலைமையுரை: வைத்திய கலாநிதி திருமதி ஞா. பவானி
(தலைவர், சித்தமருத்துவத்துறை யாழ். பல்கலைக்கழகம்)

ஆசியுரை: கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
(தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்)

அருட் தந்தை சி. ஆனந்தகுமார்
(புனித விகோரியார் ஆலயம், சாவகச்சேரி)

சிறப்புரை: பேராசிரியர் சு. பவானி
(சுதேச வைத்தியப் பணிப்பாளர்,
வட கிழக்கு மாகாணம், திருகோணமலை)

வைத்திய கலாநிதி திருமதி மீனா சிறீகாந்தன்
(மன்றக் காப்பாளர், மாணவ ஆலோசகர்,
சித்த மருத்துவத்துறை)

வெளியீட்டுரை: பொ. பாலசுந்தரம்பிள்ளை
(துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)

நூல் ஆய்வுரை: வைத்திய கலாநிதி சு. நச்சினார்க்கினியன்
(சமுதாய மருத்துவத்துறை, யாழ். மருத்துவபீடம்)

வைத்திய கலாநிதி ஐ. ஜெபநாமகணேசன்
(சித்த வைத்திய அதிகாரி, யாழ். மாநகரசபை)

சித்த மருத்துவ ஆர்வலர்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

சித்த மருத்துவ மாணவர்கள்,
யாழ். பல்கலைக்கழகம்.

(சி/7859)


## ஆசிரியர் கருத்தரங்கு

யாழ். மாவட்டத்திலுள்ள பதிவு செய்யப்பட்ட அறநெறிப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு ஒன்று நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறும்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் இந்தக் கருத்தரங்கு நடைபெறுகிறது. (இ-7)


விக்னா
கல்வி நிறுவனம்
O/L கணிதம்
பிரத்தியேக வகுப்பு
By. C.K.B. தயாளன்
ஆரம்பம்: 12— 6— 99
1.00 P.M
(66537)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போட்டிகள்

யாழ். வை. எம். சி. ஏ. அமைப்பினால் நடத்தப்படும் சதுரங்கப் போட்டி நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கும், மேசைப் பந்தாட்டப் போட்டிகள் எதிர் வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3. 30 மணிக்கும், மறுநாள் சனிக்கிழமை காலை 9 மணிக்கும் யாழ். வை.எம். சி. ஏ. மண்டபத்தில் நடைபொறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

[இ-7]

### வடக்கு...

(முதலாம் பக்கம் தொடர்)

நீர் ஜெயவர்த்தனா நேற்று நண்பகல் செய்தியாளர்களைச் சந்தித்த போதே இந்தத் தகவலை வெளியிட்டார்.

வடக்கில் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களும் கிழக்கில் மட்டக்களப்பு. திருகோணமலை மாவட்டங்களில் கணிசமான பகுதியும் இன்னமும் விடுவிக்கப்படவில்லை, அதன் காரணமாகவே வடக்கு - கிழக்கு மாகாண சபைக்குத் தேர்தலை நடத்த முடியாதுள்ளது.

அதேநேரம் வவுனியா நகர சபை மற்றும் கிழக்கில் உள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கு விரைவில் தேர்தல் நடத்தப்படும் இப்படி அவர் கூறினார்.

யாழ் மாவட்டத்தில்உள்ள உள்ளூராட்சிச் சபைகளின் உறுப்பினர்களுக்குபாதுகாப்பு வழங்க விசேட திட்டம் ஒன்றை ஜனாதிபதி வடக்கின் இராணுவத் தளபதி ஊடாக தமிழ்க் கட்சிகளுக்குச் சமர்ப்பித்திருந்தார். ஒவ்வொரு உறுப்பினருக்கும் மெய்ப் பாதுகாவலர்களை வழங்கும் இந்தத் திட்டத்துக்கு தமிழ்க் கட்சிகளின் ஆதரவு கிடைக்காததால் அதனைச் செயற்படுத்த முடியாமல் போயிற்று என்றும் அவர் தெரிவித்தார்.

[இ-3-5]

### இரு முனைகளில்...

[முதலாம் பக்கத் தொடர்]

இந்தஇரு படை அணிகளையும் எதிர்த்து புலிகள் தாக்குதல் நடத்தினர்.

பல மணி நேரம் மோதல்கள் நீடித்தன.

இந்தச் சண்டைகளில் இரு அதிகாரிகள் உட்பட 16 படையினர் உயிரிழந்தனர் என்றும்—

29 படையினர் காயமடைந்தனர் என்றும் — பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

விடுதலைப் புலிகள் தரப்பில் 45 பேர் உயிரிழந்தனர் என்றும்—

நூற்றுக்கு மேற்பட்டவர்கள் காயமடைந்தனர் என்றும் அது மேலும் தெரிவித்தது.

இந்தச் சண்டையின்போது விடுதலைப் புலிகளின் எட்டு பங்கர்களை அழித்ததுடன் ஆயுதங்களைக் கைப்பற்றியதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

கப்டன், 2 ஆம் லெப்டினன்ட் தரத்தில் உள்ள அதிகாரிகளே உயிரிழந்தனர் என்ற கொழும்புச்செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை பூர்த்தியாகி விட்டதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

இந்த சண்டைகளில் படையினரால் கிபிர், புக்காரா விமானங்களும், ஆறு ஹெலிகளும் 10க்கு மேற்பட்ட டோறாப் படகுகளும்ஈடுபடுத்தப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-3-7-21)

### பயணிகள் ...

(முதலாம் பக்கத் தொடர்)

பெறும் என்றும்—

அந்த நாள்களில் முதலாவது சேவையில் செல்பவர்கள் காலை 7 30 மணிக்கு சமூகம் தரவேண்டும் என்றும்— யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் கேட்டுள்ளது. (இ-3)

## மூன்று மாவட்டங்களில் ஊரடங்கு

தென் மாகாண சபைத் தேர்தலை அடுத்து மாத்தறை, அம்பாந்தோட்டை, காலி ஆகிய மாவட்டங்களில் நேற்றிரவு 11 மணிக்கு ஊரடங்கு அமுலுக்கு கொண்டு வரப்பட்டது.

இன்று அதிகாலை 5மணிக்கு ஊரடங்கு நீக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### பகிஷ்கரிப்பால்...

[முதலாம் பக்கத் தொடர்]

ஊழியர்களும் சில மணி நேரம் பகிஷ்கரிப்பில் கலந்து கொண்டனர்.

புனர்வாழ்வுப் பகுதியைச் சேர்ந்த பருத்தித்துறை துறைமுகத் தொழிலாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள், கோண்டாவில் களஞ்சியத் தொழிலாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் ஆகியோரும் இந்த அடையாள பகிஷ்கரிப்பில் கலந்து கொண்டனர்.

பருத்தித்துறையில் இடம் பெற்ற பகிஷ்கரிப்பு காரணமாக நேற்று கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கப்படவில்லை.

புனர்வாழ்வுப்பகுதி திட்டப் பணிப்பாளரை வர்த்தகர் ஒருவர் தரக் குறைவாக ஏசியதை ஆட்சேபித்து இந்த அடையாளப் பகிஷ்கரிப்பு நடத்தப்பட்டது தெரிந்ததே.

இந்தச் சம்பவத்தைக் கண்டித்தும் இது போன்ற சம்பவங்கள் மீண்டும் நடைபெறாமல் இருப்பதற்கும் சகல ஊழியர்களையும் வெளிநடப்புச் செய்யுமாறு யாழ். செயலக நலன்புரிக் கழகம் நேற்று அழைப்பு விடுத்திருந்தது.

இந்தப் பகிஷ்கரிப்பு காரணமாக செயலக வேலைகள் நேற்றும் பாதிக்கப்பட்டன.

(இ-5-100-173-15)

### வீரவிதான...

(முதலாம் பக்கத் தொடர்)

பொலீஸ் மா அதிபர் தூதுக் குழுவிடம் தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து இ. தொ. கா., ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ், அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ், நவசமாஜக் கட்சி, தமிழர் விடுதலைக்கூட்டணி, முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி ஆகியவற்றின்தலைவர்களும், பிரதிநிதிகளும் கூடி ஆராய்ந்து எதிர்வரும் 18 ஆம் திகதி இந்தப் பேரணியை நடத்த முடிவு செய்துள்ளனர்.

(இ-3-21)

### கொட்டும்...

(முதலாம் பக்கத் தொடர்)

படைந்தது.

காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களில் 75 சத வீத மானவர்கள் வாக்களித்தனர் என்று தேர்தல் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

வாக்குகள் எண்ணும் பணி காலதாமதமாக ஆரம்பிக்கப் பட்டுள்ளதால் தேர்தல் முடிவுகள் வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக நேற்று நள்ளிரவு உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ். அருந்தவச்செல்வன் தெரிவித்தார். (இ-3)

### அதிபர்...

(முதலாம் பக்கத் தொடர்)

ஊரில் கூடி இது தொடர்பான முடிவை எடுத்தது

அதிபர், ஆசிரியர்கள் எதிர் நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக ஒன்பது கோரிக்கைகளை முன் வைத்து இந்தப் போராட்டம் நடத்தப்படும் (இ 3)

### முருங்கனில்...

(முதலாம் பக்கத் தொடர்)

கொண்ட தாக்குதலில் ஒரு பொலீஸார் உயிரிழந்தார், 3 பொலீஸார் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் அநுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

### 6 உறுப்பினர்...

(முதலாம் பக்கத் தொடர்)

றும் ஈ. பி. ஆர். எல். எவ். போன்றவற்றின் மாநகர சபை உறுப்பினர்கள் எவரும் சமூகமளிக்கவில்லை.

தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த ஆறு பிரதிநிதிகளுடன் மட்டுமே இந்தக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் முக்கிய தீர்மானம் எதுவும் எடுக்கப் படாதபோதும் மாநகரசபையின் நாளாந்த நடவடிக்கைகள் மற்றும் பொதுமக்களின் அத்தியாவசிய சேவைகள் சம்பந்தமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன என்று பிரதிமேயர் ந. ரவிராஜ் தெரிவித்தார். (இ-173-5)

## தென் ஆபிரிக்கா வெற்றி

லண்டன், ஜூன் 11

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் உலகக் கிண்ணக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் தென் ஆபிரிக்க அணி 74 ஓட்டங்களால் நியூசிலாந்து அணியை வென்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென் ஆபிரிக்கா 50 ஓவர்களில் 287 ஓட்டங்களைப் பெற்றது. அடுத்து ஆடிய நியூசிலாந்து 50 ஓவர்களில் 213 ஓட்டங்களைப் பெற்றது.

## தேடுதல்

ஆனைக்கோட்டை, சுதுமலை, கூழாவடி ஆகிய பகுதிகள் நேற்றுக் காலை படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் இடம் பெற்றது. (இ-100-139)

## குண்டு வெடிப்பு சம்பவம்

சாவகச்சேரி-பருத்தித்துறை வீதியில் மகளிர் கல்லூரிக்கு அருகில் நேற்றுக் காலை 9 மணிக்கு குண்டுஒன்றுவெடித்தது.

அந்தப் பகுதியில் நின்ற சிப்பாய் ஒருவர் காயமடைந்ததாகக் கூறப்பட்டது.

### 9 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்)

உயிரிழந்தோரின் விவரம் வருமாறு:

- ★ கப்டன் இனியவள்
- ★ 2 ஆம் லெப்ரினட் அங்குசா
- ★ நாவினி
- ★ செண்மதி
- ★ கமலா
- ★ வேங்கையரசி
- ★ கண்ணன்
- ★ மெய்யப்பன்

உயிரிழந்தோரின் முழுப் பெயர் மற்றும் விலாசம் பற்றிய விவரங்கள் இன்று வெள்ளிக்கிழமை அறிவிக்கப் படும் என ''புலிகளின்குரல்'' தெரிவித்தது. (இ-7)

### யாழ். வான்...

(முதலாம் பக்கத் தொடர்)

பதற்றம் நிலவியது.

காலை 6.30 மணிக்கும் முற்பகல் 11.45 மணிக்கும் கிபிர் விமானங்கள் வானில் வட்டமிட்டு குண்டுகளை வீசின.

ஹெலிக்கொப்டர்களும் வட்டமிட்டு தாக்குதல்களை மேற்கொண்டன.

நேற்று நண்பகல் வரை பூநகரி, கல்முனைப் பகுதி நோக்கி ஏவப்பட்ட ஷெல்கள் மற்றும் பீரங்கிகளால் யாழ். நகரமும், தென்மராட்சிப் பகுதியும் அதிர்ந்த வண்ணம் இருந்தன.

இந்தத் தாக்குதல்கள் காரணமாக பாஷையூர், நாவாந்துறை, குருநகர் பகுதிகளில் இருந்து மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்லவில்லை (இ-3-5-15-86-30-180-17-173-139)

### குடாக்கடலூடாக ...

(முதலாம் பக்கத் தொடர்)

குருநகர் வருவதற்குத் தயாராக இருந்த இவர்களை இலக்கு வைத்து நேற்று அதிகாலை ஹெலிகொப்டர்கள் சுற்றி வட்டமிட்டன.

ஹெலிகொப்டர்களைக் கண்டு அஞ்சிய இந்த அகதிகளில் பலர் தாம் கட்டியிருந்த வேட்டிகளைக் கழற்றி உயர்த்திப்பிடித்து தாம் அகதிகள் என்பதை அடையாளம் காட்டினர்.

கடலில் நடந்தவாறே இவர்கள் குருநகரை வந்தடைந்தனர். (இ-5)


## பொருளியற் கல்லூரி

நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

A/L 2001

பொருளியல் S. வரதராஜன்

சனி — ஞாயிறு

| | | |
|---|---|---|
| பிரிவு (i) | 11-00 am | சந்தைப்பொருளாதாரம் |
| பிரிவு (ii) | 10-00 am | பொருளியல் அறிமுகம் |
| பிரிவு (iii) | 7-00 am | ஆரம்பத்தில் இருந்து |

பிரிவுIII — ஆரம்பம்:12-06-99 சனி

♥ தனிப்பாட அனுமதிகள் வழங்கப்படும் [66539]

## டொனால்ட் கணேஸகுமார் வெற்றிக் கிண்ணம்

சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம்

நடத்தும்

10 ஆவது ஆண்டு

மட்டுப்பாடுத்தப்பட்ட (50) ஓவர்களைக் கொண்ட

மாபெரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டி

பங்குபற்ற விரும்பும் கழகங்கள் உங்கள் விண்ணப்பங்களை போட்டிக்குழு செயலாளரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவுதிகதி : 14—06—99

அணி ஒழுங்கு தெரிவு : 15—06—99

போட்டிகள் ஆரம்பமாகும் திகதி: 20—06—99

போட்டிக்குழு

ப. சங்கர்
தலைவர்
போட்டிக்குழு

சொ. விமலதாசன்
செயலாளர்
போட்டிக்குழு

(சி/7858)

## A/L 2001

கலை - வர்த்தகம்

புதிய பிரிவுகள்

ஆரம்பமாகி நடைபெறுகின்றன.

12-06-99 இல் இருந்து அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.

பொருளியற் கல்லூரி

யாழ்ப்பாணம்.

(66540)

எமது ஒரிஜினல் வெளியீடுகள்

ரஜனி. பானுப்பிரியா நடித்த

① ஏழைத் தோழன்

விஜயகாந்த் நடித்த

② அன்னை பூமி

## நரேன் வீடியோ சென்ரர்

பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

T.p. 021— 2675

## மருத்துவபீட மாணவர்களின்

மிகப் பிரமாண்டமான தயாரிப்பு!

புதுப்புத்தாயிரம் ஆண்டை வரவேற்குமுகமாக,

**Millennivm Musical Show**

(புத்தாயிரமாண்டு இன்னிசை அருவி)

எங்கு?

எப்போது?

— மருத்துவபீட மாணவர்கள்

(இ/7856)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் [பிறைவேற்] லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11-06-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org